# ரணவிரு சேவா அதிகாரசபை

# ஆண்டறிக்கை

# 2013

இல: 449, காலி வீதி,
கொழும்பு 03.

# ஆண்டறிக்கை

# 2013

**ரணவிரு சேவா அதிகாரசபை**

**இல: 449, காலி வீதி,**
**கொழும்பு 03.**

**(94) 011 2055673,2055674,2055675,2055676**
**மின்னஞ்சல் : ranaviruseva@gmail.com**

# உள்ளடக்கம்

பக்க இல.

ரணவிரு சேவா அதிகாரசபை……………………………………………………03

எமது பணிப்பொறுப்புக்கள்………………………………………………….. 04

ரணவிரு சேவா அதிகார சபையின் முகாமைத்துவ சபை……………………...05

இலக்குப் பயனாளிகள்………………………………………………………….. 06

2013 ஆண்டிற்கான அணுகுமுறை…………………………………………….. 07 - 08

ரணவிரு சேவா அதிகார சபையின் ஆளணியினர்…………………………… 09

நிர்வாக அலுவலர் பதவி, உள்ளக கணக்காய்வாளர் பதவி…………………. 09

நிதி பெறப்படும் செயன்முறைகள் ……………………………………………... 09 - 10

உடல் உள வலுவூட்டல் பிரிவு………………………………………………..... 11 - 32

சமூக மற்றும் கலாசார பிரிவு…………………………………………………… 33 - 40

இராணுவத்தினருக்கான அபிமானம் மற்றும் கௌரவப்படுத்தல் பிரிவு…… 41 - 44

கல்விசார் திறன்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரிவு……………. 45 - 60

தரவு மற்றும் தகவல் பிரிவு……………………………………………………… 61 - 63

முடிவுரை………………………………………………………………………… 64

### இணைப்புக்கள்

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை – பக்கம் 13

நிதிக்கூற்று– பக்கம் 26

## ஆண்டறிக்கை 2013 - சிங்கள மொழிபெயர்ப்பு

## ஆண்டறிக்கை 2013 - ஆங்கில மொழிபெயர்ப்பு

# ரணவிரு சேவா அதிகாரசபை

## தொலைநோக்கு

**"ரணவிரு எனும் திருநாமத்தினை இத் தேசத்தில் நன்றியுடன் போற்றுதல்"**

## எது பணிநோக்கு

இலங்கையின் ஒருமைப்பாட்டை பேணிப் பாதுகாக்கும் பொருட்டு தம் இன்னுயிர் நீத்த, காணாமற்போன மற்றும் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களுக்கு உள ரீதியானதும், சமூக ரீதியானதுமான ஸ்திரத்தன்மையைத் தோற்றுவிப்பதுடன், சேவையிலுள்ள இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்கு உளரீதியான புத்துணர்ச்சியூட்டும் செயற்பாடுகளை முன்னெடுத்தல்.

# எமது பணிப்பொறுப்புக்கள்

(1999 இல. 54 ஆன ரணவிரு சேவா அதிகாரசபைச் சட்டத்தின் பிரகாரம்)

(அ) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களின் நலன்பேணல் மற்றும் அவர்களுக்குப் புனர்வாழ்வளித்தல் தொடர்பாக ஏற்பாடுகளைத் திட்டமிடல்.

(ஆ) (i) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும்

(ii) செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு வீடு வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்

(இ) (i) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும்

(ii) செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு மருத்துவ வசதிளை வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்

(ஈ) (i) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும்

(ii) செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு புலமைப் பரிசில் மற்றும் பிற உதவிகளையும் நல்கி, கல்வி தொடர்பாக வசதிகளை வழங்கல் மற்றும் அவை தொடர்பாக உதவி புரிதல்

(உ) (i) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கும் மற்றும்

(ii) செயற்பாட்டு நடவடிக்கையின் போது மரணமடைந்த அல்லது காணாமற்போன ஆயுதப் படையினதும் பொலிஸ் படையினதும் உறுப்பினர்களின் கீழ் தங்கி வாழ்வோருக்கு பயனுறுதி வாய்ந்த சேமலாப பாதுகாப்புடன் கூடிய உதவிகளை வழங்குதல்

(உ) செயற்பாட்டு நடவடிக்கையின் போது, அங்கவீனமுற்ற ஆயுதப்படை மற்றும் பொலிஸ் படை உறுப்பினர்களுக்கு சேமலாப உதவிகளை வழங்கும் பொருட்டு தொழிநுட்ப மற்றும் விவசாய அல்லது வர்த்தக முயற்சியாண்மை தாபிப்பு மற்றும்

(ஊ) அதிகார சபையின் தொழிற்கூறுகளை நிறைவேற்றும் பொருட்டு போதிய நலன்பயக்கும் அனைத்துவித நடவடிக்கைகளையும் செயற்படுத்தல்

# ரணவிரு சேவா அதிகார சபையின் முகாமைத்துவ சபை

| | | |
|---|---|---|
| திருமதி பத்மா வெத்தேவ | - | தலைவர் |
| திருமதி நந்தா இந்திவங்ச | - | உப தலைவர் |
| திரு. மேஜர் ஜெனரல் பாலித பர்னாந்து USP,psc | - | இராணுவ தொடர்பாடல் அலுவலர் |
| திரு. திலீப் ஜயவீர | | பாதுகாப்பு அமைச்சின் முகவர் |
| திருமதி ஹிரன்சா களுதந்திரி | - | பணிப்பாளர்<br>நிதி மற்றும் கொள்கைத் திட்டமிடல் அமைச்சு |
| | - | பதவிநிலை பிரதான அலுவலர்<br>இலங்கை இராணுவப் படை |
| | - | பதவிநிலை பிரதான அலுவலர்<br>இலங்கை கப்பல் படை |
| | - | பதவிநிலை பிரதான அலுவலர்<br>இலங்கை வான் படை |
| | - | சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்<br>நலன்புரி பகுதி<br>இலங்கை பொலிஸ் |

# இலக்குப் பயனாளிகள்

ரணவிரு சேவா அதிகார சபையின் பணிநோக்கில் ஸ்திரமான வகைப்படுத்தலின் கீழ் இனங்காணப்பட்ட பயனாளிகளின் நலன்பேணல் வசதிகளை வழங்குவது இதன் இலக்காகும். அப்பயனாளிகள் பின்வருமாறு:

1. தாய்நாட்டிற்காக உயிர்நீத்த மற்றும் காணாமற் போன 29,934 இராணுவ வீரர்களின் தங்கி வாழ்வோர்
2. நாட்டினதும் நாட்டு மக்களினதும் பாதுகாப்பிற்காக நடைமுறைப்படுத்தப்பட்ட செயற்பாடு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற 5165 இராணுவ வீரர்கள் மற்றும்
3. நிரந்தர அங்கவீனமுற்றவர்களாக வகைப்படுத்தப்பட்டுள்ள 9578 இராணுவ வீரர்கள்

இதனுள் 54,358 இராணுவ வீரர்களின் குடும்பங்கள் இனங்காணப்பட்டுள்ளன.

# ரணவிரு சேவா அதிகார சபையின் வெற்றியை நோக்கி குறிக்கோள்கள்

1) இராணுவ வீரர் எனும் நாமத்தை கௌரவமாகவும், அபிமானத்துடனும் போற்றும் பொருட்டு நாடு பூராகவும் தனிக் குடும்பங்களாக பரந்துபட்டு காணப்படும் இராணுவ வீரர்களின் குடும்பங்களை ஒன்றுதிரட்டி அக்குடும்பங்களிடையே சிறந்த தொடர்பாடல்களையும், தொடர்புகளையும் கட்டியெழுப்புதல்
2) தன்னம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் கூடியதாக இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்களை திகழச் செய்தல்
3) சகல இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கும் நிரந்தர வீடுகளை வழங்குதல்
4) காணியற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு காணிகளை வழங்குதல்
5) இராணுவ வீரர்களுக்கும் அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு ம் அவசரமான சந்தர்ப்பங்களில் அவர்களது தேவைப்பாடுகளை பூர்த்தி செய்வதற்கு நிதிசார் உதவிகளை வழங்குதல்
6) இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்களை வலுவூட்டுதல்
7) அங்கவீமுற்ற இராணுவ வீரர்களை தன்னம்பிக்கையுடன் பணியாற்றக்கூடியவர்களாக மாற்றுதல்
8) இராணுவ வீரர்களின் பெயர்களை அடிப்படையாகக் கொண்ட மாதிரிக் கிராமங்களை உருவாக்குதல்
9) இராணுவ வீரர்களின் உன்னதமான, அர்ப்பணிப்புடன் கூடிய உயரிய செயற்பாடுகளை மக்கள் நன்றியுடன் நினைவுகூரும் பொருட்டு தேசிய இராணுவ ஞாபகார்த்த விழா ஏற்பாடு செய்யப்படுவதுடன், தற்போதைய காலகட்டத்தில் இராணுவ வீரர்கள் நாட்டின் அரும்பெரும் பொக்கிஷங்களாக போற்றப்படுகின்றனர்.

# 2013 ஆண்டிற்கான அணுகுமுறை

1999 ஆண்டின் இல. 54 ஐக் கொண்ட ரணவிரு சேவா சட்டத்திற்கு அமைய 2000 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ரணவிரு சேவா அதிகார சபை பதின்மூன்று ஆண்டுகளாக இராணுவ வீரர்களுக்காக ஆற்றிய பணிகள் பாராட்டுக்குரியனவாகும். இலங்கை 54,358 ஆன இராணுவக் குடும்பங்களை உள்ளடக்கிய வகையில், பாதுகாப்பான இராணுவ சமூகம் ஒன்றினைக் கட்டியெழுப்பும் நோக்குடன், இராணுவ சமூகத்தின் பொறுப்புக்களை நிறைவேற்றுவது தொடர்பாக ரணவிரு சேவா அதிகார சபை ஒரு தசாப்தத்தை விட அதிக காலம் பயனுறுதி வாய்ந்த சேவைகளை ஆற்றியுள்ளது. இலங்கை வாழ் மக்கள் அச்சப் பீதியுடனும், எதிர்காலத்தைப் பற்றிய கனவுகள் சிதைந்து சின்னா பின்னமாகிப் போன முப்பது ஆண்டுகால பிரிவினைவாத, பயங்கரவாத யுத்தத்தின் கோர வடுக்கள் எண்ணிலடங்காதவை. அப் பயங்கரவாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டு வரும் பொருட்டு தாய்நாட்டிற்காக தம் இன்னுயிர் நீத்த, காணாமற்போன, அங்கவீனமுற்று குருடர்களாகவும், செவிடர்களாகவும், இன்னோரன்ன உபாதைகளுக்கு உட்பட்ட இராணுவத்தினருக்கான கடமைகளை நிறைவேற்றும் பணி, ரணவிரு சேவா அதிகார சபையிடம் ஒப்படைக்கப்பட்டது. அப் பணிகள் ரணவிரு சேவா அதிகார சபையினால் செவ்வனே நிறைவேற்றப்பட்டுள்ளன என்பதை எவராலும் மறுத்துரைக்க முடியாது.

தேசத்தினால் என்றென்றும் நினைவுகூரப்படும் இவ் இராணுவ வீரர்களின் மூலோபாய திறன்கள், மனோதிடம், நாட்டுப்பற்று மற்றும் அதிஉன்னத தலைமைத்துவம் ஆகியவற்றின் காரணமாக இதற்கு நான்கு ஆண்டுகளுக்குப் முன்னர் பயங்கரவாத யுத்தம் இந்நாட்டில் இருந்து துடைத்தெறியப்பட்டது.

ரணவிரு சேவா அதிகார சபைக்கு அரசாங்கத்தின் கட்டளைச் சட்டங்கள் ஊடாக பரந்துபட்டளவிலான பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. ஏனெனில், முழு உலகமுமே வியக்கும் வண்ணம் யுத்தம் முடிவுறுத்தப்பட்டது. தமது தாய்நாட்டின் இறையாண்மை, பிராந்திய ஒருமைப்பாடு என்பனவற்றை பேணும் பொருட்டு தம் இன்னுயிர் நீத்த, காணாமற்போன, அங்கவீனமுற்று அர்ப்பணிப்புடன் போரிட்ட இராணுவ வீரர்கள் மாத்திரமன்றி அவர்களது பிள்ளைகள், மனைவி, பெற்றோர் ஆகியோருக்கும் இத்தேசம் நன்றிக்கடன் பட்டுள்ளது. 2009 இல் யுத்தம் முடிவுறுத்தப்பட்டதன பின்னர் ரணவிரு அதிகார சபையிடம் முன்னரை விட பாரிய பொறுப்புக்கள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. இந்நாட்டின் எல்லைகுட்பட்ட பிரதேசத்தினுள் பயங்கரவாதத்தை முடியறிப்பதற்கு அரசாங்கத்தினாலும், இராணுவ வீரர்களினாலும் முடிந்துள்ளமையானது பெரிதும் பாராட்டிற்குரியதேயாகும்.

ரணவிரு சேவா அதிகார சபை 2013 ஆண்டில் இவ்வாறான பாரிய பொறுப்புக்களை சுமந்த வண்ணம் காலடியெடுத்து வைத்தது. இவ் விடயங்கள் தொடர்பாக ஆழமான அறிவுடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாய ராஜபக்ஷ அவர்கள் செயற்பட்டார். இராணுவ வீரர்களை போற்றிப் பாராட்டிய அதிமேதகு சனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ அவர்களினால் இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு வாழ்நாள் பூராவும் ரு. 750 மாதாந்தம் வழங்குவதற்கு வரவு செலவுத் திட்டத்தின் மூலம் அறிவிக்கப்பட்டது 2012 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட சிறப்பான ஒரு விடயமாகும். இது ஒரு வருட காலத்தினுள் மேற்கொள்ளப்பட்டது.

ரணவிருசேவா அதிகார சபையானது, டீ.ஆர். விஜேவர்த்தன மாவத்தை, கொழும்பு 10 எனும் முகவரியில் தற்காலிகமாக இயங்கியதுடன், பின்னர் இல. 449, கொழும்பு 03 எனும் முகவரியில் அமைந்துள்ள அரைவாசி வேலைகள் முடிவுறுத்தப்பட்ட, சொந்தக் கட்டிடத்தில் இயங்குகின்றது. எதிர்பாரா விதமாக முன்னைய முகவரிக்கு கொண்டு செல்லப்பட்ட போதிலும் தற்போது குறைபாடுகளுடன் கூடியதாக இருந்தபோதிலும், சொந்தக் கட்டித்தில் இயங்குவது பாட்டுக்குரியதாகும்.

எனினும் விசேட எமது இலக்கு குழுக்களின் ஒரு பகுதியான அங்கவனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது வயோதிப பெற்றோர்களுக்கு அக்கட்டிதத்தில் வசதிகள் போதுமானதாக இல்லை. இந்நிலையைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# ரணவிரு சேவா அதிகார சபையின் ஆளணியினர்

2012 ஆண்டில் அங்கீகாரமளிக்கப்பட்ட ஆளணியினர் முன்கட்டமைக்கப்பட்ட திட்டத்தினை 2013 ஆம் ஆண்டில் மேற்கொள்ள முடியாதிருந்ததுடன் அப் பணியை தொடர்ந்து வரும் ஆண்டில் முன்னுரிமையளித்து செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

அது வரை ஆளணியினரின் பற்றாக்குறையானது வருடாந்த இலக்குகளை எய்துவதில் தடைகளை ஏற்படுத்தாத விதத்தில் நடவடிக்கை எடுப்பதற்கு திட்மிடப்பட்டுள்ளது.

# நிர்வாக அலுவலர் பதவி, உள்ளக கணக்காய்வாளர் பதவி

நிர்வாக அலுவலர் பதவி மற்றும் உள்ளக கணக்காய்வு பதவிகள் தொடர்பாக நிரந்தர அலுவலர்களை நியமிக்க தேவை எழுந்துள்ளதுடன், நடைமுறைப்படுத்தப் படவிருந்த புதிய ஆளணி மறுசீரமைப்பு வேலைத்திட்டத்தின் கீழ் இக்குறைபாட்டினை தீர்த்துக் கொள்ள முடியும்.

# நிதி பெறப்படும் செயன்முறைகள்

ரணவிரு சேவா அதிகார சபையின் ரணவிரு சேவா அதிகார சபையின் இலக்குச் செயற்திட்டங்கள் மற்றும் சேவைகளை வழங்கும் பொருட்டு தேவைப்படுகின்ற நிதிசார் ஒதுக்கீடுகள் பின்வரும் இரு நிறுவனங்களின் மூலம் பெறப்படுகின்றன.

1. பொதுத் திறைசேரி
2. தேசிய லொத்தர் சபை

ரணவிரு சேவா அதிகார சபையின் சகலவிதமான நலன்புரி செயற்திட்டங்களுக்கும் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனவந்தர்களினால் பண ரீதியாகவும், பொருள் ரீதியாகவும் வழங்கப்படுகின்ற நன்கொடைகளும் இதில் அடங்குகின்றன.

இதற்கு மேலதிகமாக இராணுவ வீரர்களின் பயனாளிகளது பல்வேறு தேவைப்பாடுகளுக்குமான நிதியை ரணவிரு சேவா அதிகார சபையின் மூலம் பெற்றுக் கொள்வதை நோக்கமாகக் கொண்டு மேலதிக நிதி வங்கியில் முதலீடு செய்யப்பட்டு அதன் மூலம் மேலதிக வருமானத்தை ஈட்டிக் கொள்ளக்கூடிய செயன்முறையும் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது. இது தொடர்பான உசிதமான முதலீட்டு முறையொன்று அதிகார சபையின் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

# 01

# உடல் உள வலுவூட்டல் பிரிவு

**1.1. உளரீதியான சமூக செயற்திட்டம்**

1.1.1. ரணவிரு மருத்துவப் பரிசோதனைகள்

1.1.2. கண் பரிசோதனை

1.1.3. மருத்துவ உதவிகளை வழங்குதல்

1.1.4. மருத்துவக் கடன் வழங்குதல்

1.1.5. மனோவைத்திய செயலமர்வுகளை நடாத்துதல்

1.1.6. அங்கீவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்

**1.2 அங்கீவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான செயற்திட்டம்**

1.2.1. முச்சக்கர வண்டிகளை வழங்குதல்

1.2.2. குளியலறைக்கான உதவிகளை வழங்குதல்

1.2.3. தனிப்பட்ட ஆலோசனைகள்

1.2.4. உடனடி இடர் கடன் வழங்குதல்

1.2.5. அவசர இடர்களின் போது நிதியுதவி வழங்குதல்

## 1.1 உளரீதியான சமூக செயற்திட்டம்

முப்படைகளிலும் பொலிஸ் சேவையிலும் பணிபுரிகின்ற அலுவலர்கள், தாய் நாட்டின் பாதுகாப்பிற்காக அங்கவீனமுற்றவர்களாக மன அழுத்தங்களுக்குட்பட்ட இராணுவ வீரர்கள் மற்றும் தமது அன்புக்குரியவர்களை இழந்து நிர்க்கதியான நெருங்கிய உறவினர்கள் ஆகியோரை அணுகி அவர்களுக்கு ஆறுதலளித்து, பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நடவடிக்கைகளில் அவர்களை ஈடுபடுத்தி தன்னம்பிக்கையுடனும் அர்ப்பணிப்புடனும் பணியாற்றக்கூடியவர்களாக அவர்களை மாற்றியமைப்பதே இச் செயற்திட்டத்தின் நோக்கமாகும்.

**இலக்கு**

- இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப உறுப்பினர்களின் பிரச்சினைகள் மற்றும் திறன்களை இனங்காணல்
- உளவளத்துணை மற்றும் வழிகாட்டிச் சேவைகளை வழங்குதல்
- இராணுவ வீராங்கனைகள் மற்றும் குடும்ப உறுப்பினர்களை வலுவூட்டுதல்

**இலக்குக் குழு**

- அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள்
- இராணுவ வீரர்களின் மனைவிமார்கள்
- இராணுவ வீரர்களின் பிள்ளைகள்
- ஓய்வு பெற்ற மற்றும் ஓய்வுபெறவேண்டிய நிலைக்காளான இராணுவ வீரர்கள்
- சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்கள்

### 1.1.1. ரணவிரு மருத்துவப் பரிசோதனைகள்

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகிய அனைவரையும் உள, உடல் ரீதியாக வலுவூட்டும் இம் மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன.

சுகாதார அமைச்சு, வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்து இம் மருத்துவப் பரிசோதனைகளை நடாத்தியதுடன், பயனாளிகளுக்கு விழிப்புணர்வூட்டல்கள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்படும் இடம் மற்றும் திகதி என்பன உரிய மாகாணத்தின் மாகாண அலுவலர் மற்றும் அமைப்புக்களின் அலுவலர்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டன.

சிறிய மருத்துவ பரிசோதனைகள் அப்பொழுதே செய்யப்பட்டதுடன், ஏனைய இனங்காணப்பட்ட நோய்கள் தொடர்பான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்கு உரிய நிறுவனங்களுக்குச் செல்லும்படி பணிக்கப்பட்டனர்.

**இலக்கு**

- இராணுவ வீரர்கள் தொற்றா நோய்களுக்கு ஆளாவதைத் தடுத்தல்
- தொற்றா நோய்கள் சம்பந்தமாக விழிப்புணர்வூட்டல்
- விசேட நோய்களுக்குள்ளானவர்களை இனங்காணல்
- தேவையுள்ளோருக்கு மருத்துவ உதவிகளை வழங்குதல்

**இலக்குக் குழு**

- அனைத்து அமைப்புக்களினதும் அங்கத்தவர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| 2013 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மருத்துவ பரிசோதனைகள் | 05 |
| 2013 ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை | ரூபா. 375,000.00 |
| 2013 நடாத்தப்பட்ட சிகிச்சைகளின் எண்ணிக்கை | 07 |
| 2013 செலவினம் | ரூபா. 386,920.90 |
| மேம்பாடு | 140% |

### 1.1.2 கண் பரிசோதனை

சம்பளம் பெறாத, ஓய்வூதியம் மாத்திரம் பெறுகின்ற, 25% சம்பளம் பெறுகின்ற. சம்பளம் பெற்ற போதிலும் பொருளாதார நெருக்கடிகளுக்காளான இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு இலவசமாக மூக்குக் கண்ணாடிகள் இந் நிகழ்ச்சித் திட்டத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

ஜோர்ஜ் குணரத்ன கண் நிபுணத்துவ நிறுவனத்தின் அலுவலர்களின் பங்களிப்புடன் கண் பரிசோதனைகள் நடாத்தப்பட்டதுடன், பயனாளிகளுக்கு விழிப்புணர்வூட்டல்கள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்படும் இடம் மற்றும் திகதி என்பன உரிய மாகாணத்தின் மாகாண அலுவலர் மற்றும் அமைப்புக்களின் அலுவலர்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டன. பெரும்பாலான சந்தர்ப்பங்களில் மருத்துவப் பரிசோதனைகளுக்கு சமாந்தரமாக கண் பரிசோதனைகளும் நடாத்தப்படுகின்றன.

கண் பரிசோதனைகளின் பின்னர் தெரிவு செய்யப்படும் உறுப்பினர்களுக்கு மூக்குக் கண்ணாடிகள் ரணவிரு சேவா அதிகார சபையின் அனுசரணையுடன் வழங்கப்படுவதுடன் கண்களில் அறுவைச் சிகிச்சைகள் செய்ய வேண்டிய இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் மருத்துவ உதவியளிப்பு நிகழ்ச்சித் திட்டத்தில் ஈடுபடுத்தப்பட்டனர்.

**இலக்கு**

- குறைந்த வருமானம் பெறுகின்ற இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு ரணவிரு சேவா அதிகார சபையின் அனுசரணையுடன் மூக்குக் கண்ணாடிகள் இந் நிகழ்ச்சித்திட்டத்தின் வழங்கப்படுகின்றன.

- இங்கு இனங்காணப்பட்ட கண் நோயாளர்களுக்கு தொடர் சிகிச்சைகள் தொடர்பாக மருத்துவ உதவிகள் வழங்கப்படுகின்றன.

**இலக்குக் குழு**

- குறைந்த வருமானம் பெறுகின்ற அமைப்புக்களினதும் அங்கத்தவர்கள் (சம்பளம் பெறாத, ஓய்வூதியம் மாத்திரம் பெறுகின்ற, 25% சம்பளம் பெறுகின்ற )

**வருடாந்த மேம்பாடு (கண் பரிசோதனை)**

| | |
|---|---|
| 2013 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட பரிசோதனைகள் | 1000 |
| 2013 ஆண்டில் ஒதுக்கப்பட்ட தொகை | ரூபா. 1,000,000.00 |
| 2013 நடாத்தப்பட்ட சிகிச்சைகளின் எண்ணிக்கை | 1027 |
| 2013 செலவினம் | ரூபா. 1,001,325.00 |
| மேம்பாடு | 102.7% |

குறைந்த வருமானம் பெறுகின்ற இராணுவ அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கும் மூக்குக் கண்ணாடிகள் வழங்குதல்.

| தொடர் இல. | மாகாணம் | மாவட்டம் | வழங்கிய மூக்குக் கண்ணாடிகள் |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கொழும்பு | 04 |
| | | கம்பஹா | 28 |
| 02 | தென் மாகாணம் | காலி | 59 |
| | | மாத்தறை | 123 |
| 03 | மத்திய மாகாணம் | கண்டி | 238 |
| | | நுவரெலியா | 102 |
| 04 | சப்ரகமுவ மாகாணம் | கேகாலை | 10 |
| | | இரத்தினபுரி | 35 |
| 05 | வயம்ப (வட கிழக்கு) | குருனாகலை | 199 |
| | | புத்தளம் | 117 |
| 06 | கிழக்கு மாகாணம் | அம்பாறை | 112 |




## வைத்திய பரிசோதனைகளை நடாத்துதல்

| தொடர் இல | மாகாணம் | மாவட்டம் | தொகை | இடமும் திகதியும் | கலந்து கொண்டோர் |
|---|---|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கொழும்பு | 02 | சாலாவ ரணவிரு கிராமம் - 2013/07/06 | 100 |
| | | | | தொம்பகொடரணவிரு கிராமம் - 2013/08/24 | 55 |
| 02 | மத்திய மாகாணம் | கண்டி | 01 | கல்கொடபோதிராஜாராம விகாரை, தலாத்துஓயா 2013/05/27 | 137 |
| | | நுவரெலியா | 01 | அரத்தன ரஜமகா விகாரை 2013/09/17 | 144 |
| 03 | வயம்ப மாகாணம் | புத்தளம் | 02 | புத்தளம் பௌத்த நிலையம் 2013/09/23 | 187 |
| | | | | ஹரேந்திர கொரயா விளையாட்டு மைதானம் 2013/09/24 | 87 |
| 04 | கிழக்கு மாகாணம் | அம்பாறை | 01 | அம்பாறை நகர மண்டபம் 2013/03/05 | 185 |



## வைத்திய பரிசோதனைகளை நடாத்துதல்



அம்பாறை நகர மண்டபம் *2013/03/05*



சாலாவ ரணவிரு கிராமம் *2013/07/06*





கல்கொடபோதிராஜாராம விகார *2013/05/27*



ஹரேந்திர கொரயா விளையாட்டு மைதானம் 2013 - 09- 24

<u>கண் பரிசோதனை</u>

| தொ. இல. | மாகாணம் | மாவட்டம் | தொகை | இடமும் திகதியும் | கலந்து கொண்டோர் |
|---|---|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கம்பகஹா | 01 | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், கம்பகஹா 2013/11/28 | 28 |
| 02 | தென் மாகாணம் | காலி | 02 | அம்பலாங்கொடை சிறி விஜயாரார 2013/11/11 | 54 |
| | | | | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், காலி 2013/11/12 | 06 |
| | | மாத்தறை | 02 | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், மாத்தறை 2013/11/13 | 92 |
| | | | | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், அக்குரஸ்ஸ 2013/11/14 | 32 |
| 03 | மத்திய மாகாணம் | கண்டி | 03 | கல்கொடபோதிராஜாராம விகாரை, தலாத்துஓயா 2013-05-27 (ரணவிரு மருத்துவ பரிசோதனை நிகராக) | 83 |
| | | | | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், கண்டி 2013/07/30 | 109 |
| | | | | பிரதேச செயலகம், கம்பொல 2013-07-31 | 56 |
| | | நுவரெலியா | 01 | அரத்தன ரஜ மகா விஹார 2013-09-17 (ரணவிரு மருத்துவ பரிசோதனை நிகராக) | 100 |
| 04 | சப்ரகமுவ | கேகாலை | 01 | ருவன்வெல்ல பிரதேச செயலகம் 2013-09-02 | 14 |
| | | இரத்தினபுரி | 02 | இரத்தினபுரி பிரதேச செயலகம் 2013-09-03 | 13 |
| | | | | பலாங்கொடை பிரதேச செயலகம் 2013-09-04 | 20 |
| 05 | வயம்ப | குருனாகலை | 03 | ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம், குருனாகலை 2013/07/23,24 | 43 |
| | | | | கல்கமுவ கலாசார நிலையம் 2013/11/19 (சுகாதார மேம்பாட்டு செயலமர்வுக்கு நிகராக) | 101 |
| | | | | நிக்கவரெட்டிய கமநல சேவை நிலையம் 2013/11/20 (சுகாதார மேம்பாட்டு செயலமர்வுக்கு நிகராக) | 80 |
| | | புத்தளம் | 02 | புத்தளம் பௌத்த நிலையம் 2013-09-23 (ரணவிரு மருத்துவ பரிசோதனை நிகராக) | 64 |
| | | | | ஹரேந்திர கொரயா விளையாட்டு மைதானம் 2013-09-24 (ரணவிரு மருத்துவ பரிசோதனை நிகராக) | 53 |
| 06 | கிழக்கு மாகாணம் | அம்பாறை | 01 | அம்பாறை நகர மண்டபம் 2013-03-05 (ரணவிரு மருத்துவ பரிசோதனை நிகராக) | 91 |




## கண் பரிசோதனை


அம்பாறை நகர மண்டபம் - 2013/03/05


இரத்தினபுரி பிரதேச செயலகம் - 2013/09/03


போதிராஜாராம விகாரை, தலாத்துஓயா - 2013/05/27


அம்பாறை பிரதேச செயலகம்



காலி ஜோர்ஜ் குனரத்ன நிறுவனம் - 2013/11/12

### 1.1.3 மருத்துவ உதவிகளை வழங்குதல்

செயற்பாட்டு நடவடிக்கைகள் அங்கவீனமுற்ற, ஓய்வுபெறக்கூடிய நிலைக்காளான, நோய்வாய்ப்பட்ட இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் தொடர்பாக மருத்துவ சிகிச்சைகள், அவசர அறுவைச் சிகிச்சை, மருத்துவ பரிசோதனை என்பவற்றிற்காக மருத்துவ உபகரணங்களை கொள்வனவு செய்வதற்காக ரூபா 50,000.00 உச்சளவிலான உதவித் தொகை வழங்கப்பட்டது.

உரிய மருத்துவ அறிக்கைகள் மற்றும் வைத்தியரினால் சான்றுப்படுத்தப்பட்ட செலவாகும் தொகை மதிப்பீட்டு அறிக்கையுடன் விண்ணப்பதாரியின் கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் எமக்கு அனுப்புவதன் ஊடாக அல்லது குறித்த ஆவணங்களுடன் நேரடியாக உளநல சமூக செயற்திட்டத்திற்கு வருகைதந்து மருத்து உதவி தொடர்பான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள முடியும். அனைவரையும் உள, உடல் ரீதியாக வலுவூட்டும் இம் மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்பட்டன. குறைந்த வருமானம் பெறுகின்ற அங்கவீனமுற்று ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறவினர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக அங்கவீனமுற்ற, ஓய்வுபெறக்கூடிய நிலைக்காளான, நோய்வாய்ப்பட்ட இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் காரணமாக நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகியோரின் சுகாதாரத் தேவைப்பாடுகள் தொடர்பாக உதவி வழங்கல்.

**இலக்குக் குழு**

- குறைந்த வருமானம் பெறுகின்ற அங்கவீனமுற்ற, ஓய்வுபெற்ற இராணுவ வீரர்கள், மற்றும் நெருங்கிய உறவினர்கள்
- உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| 2013 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மருத்துவ உதவுதொகை | - கோரிக்கைளின்படி |
| ஆண்டின் ஆரம்பத்தில் 2013 இற்கான ஒதுக்கீடு | - ரூ. 2,000,000.00 |
| 2013 ஆண்டில் விநியோகிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | - 126 |
| 2013 ஆண்டில் மருத்துவ உதவுதொகை பெற்ற பயனாளிகள் | - 95 |

(புதிய விண்ணப்பாதாரர் -72 / இரண்டாம் முறை – 17, த. கொ. செலுத்தவேண்டியவர்கள் – 06)

| | |
|---|---|
| 2013 ஆண்டின் மருத்துவ உதவிகளுக்கான கிரயம் | - ரூ. 3,546,371.00 |

2013 ஆண்டிற்கான மருத்துவ உதவி வழங்கல் (மாவட்ட ரீதியாக)

| தொ.இ. | மாகாணம் | மாவட்டம் | மருத்துவ உதவுதொகை பயனாளிகள் தொகை |
|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கொழும்பு | 12 |
| | | களுத்துறை | 08 |
| | | கம்பஹா | 16 |
| 02 | தென் மாகாணம் | காலி | 05 |
| | | மாத்தறை | 02 |
| | | ஹம்பாந்தோட்டை | 01 |
| 03 | மத்திய மாகாணம் | கண்டி | 09 |
| | | மாத்தளை | 03 |
| | | நுவரெலியா | 01 |
| 04 | ஊவா மாகாணம் | பதுளை | 03 |
| | | மொனராகலை | 03 |
| 05 | சப்ரகமுவ மாகாணம் | கேகாலை | 02 |
| | | இரத்தினபுரி | 15 |
| 06 | வயம்ப | குருனாகலை | 06 |
| | | புத்தளம் | 01 |
| 07 | வடமத்திய | அநுராதபுரம் | 04 |
| | | பொலனறுவை | 04 |



**1.1.4. மருத்துவ சலுகை கடன் வழங்குதல்**

செயற்பாட்டு நடவடிக்கைகள் அங்கவீனமுற்ற, ஓய்வுபெறக்கூடிய நிலைக்காளான, நோய்வாய்ப்பட்ட இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள், சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் ஆகியோர் தொடர்பாக அவசர அறுவைச் சிகிக்சைகளுக்காக 2.5 % சேவைக் கட்டணத்தின் கீழ் சம்பளத்தில் இருந்து அறவிட்டுக் கொள்ளும் அடிப்படையில் ரூபா 100,000.00 உச்சளவில் கடன்தொகை வழங்கப்படும்

உரிய மருத்துவ அறிக்கைகள் மற்றும் வைத்தியரினால் சான்றுப்படுத்தப்பட்ட செலவாகும் தொகை மதிப்பீட்டு அறிக்கையுடன் விண்ணப்பதாரியின் கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் எமக்கு அனுப்புவதன் ஊடாக அல்லது குறித்த ஆவணங்களுடன் நேரடியாக எமது செயற்திட்டத்திற்கு வருகைதந்து மருத்து கடன் தொடர்பான விண்ணப்பத்தை பெற்றுக் கொள்ள முடியும். இக்கடனைப் பெறுவதற்கு தாங்கள் கட்டாயமாக முப்படைகளில் அல்லது பொலிஸ் சேவையில் மாதாந்த சம்பளம் பெறுகின்ற அங்கத்தவராக இருத்தல் வேண்டும். அத்துடன் ஆகக் குறைந்தது இன்னும் நான்கு (4) ஆண்டுகள் சேவைக்காலம் இருத்தல் வேண்டும்.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக அங்கவீனமுற்ற, ஓய்வுபெறக்கூடிய நிலைக்காளான, நோய்வாய்ப்பட்ட இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள், சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் ஆகியோரின் அவசர அறுவைச் சிகிச்சை தேவைப்பாடுகள் தொடர்பாக சலுகை அடிப்படையில் உதவுதொகை வழங்கல்.

**இலக்குக் குழு**

- செயற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக உயிர் நீத்த இராணுவ வீரர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களின் கீழ் தங்கி வாழ்வோர்
- செயற்பாட்டு நடவடிக்கைகள் காரணமாக காணாமற்போன இராணுவ வீரர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள் மற்றும் அவர்களின் கீழ் தங்கி வாழ்வோர்
- தற்போது சேவையிலுள்ள இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது பெற்றோர் மற்றும் அவர்களின் கீழ் தங்கி வாழ்வோர்

| | |
|---|---|
| **உச்ச கடன் பெறுமதி** | **உச்சதொகை - ரூபா 100,000/-** |
| **அறவிடப்படும் காலஎல்லை** | **உச்சளவில் – 03 ஆண்டுகள் ( 36 தவணை)** |
| **மாதாந்த அறவீடு** | **ரூபா 2916.78** |

வருடாந்த மேம்பாடு

| | |
|---|---|
| 2013 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட மருத்துவ சலுகை கடன் | - 10 |
| 2013 ஆண்டிற்கான ஒதுக்கீடு | - ரூ. 1,000,000.00 |
| 2013 ஆண்டில் விநியோகிக்கப்பட்ட விண்ணப்பங்கள் | - 18 |
| 2013 ஆண்டில் வழங்கப்பட்ட மருத்துவ சலுகை கடன் | - 04 |
| 2013 ஆண்டின் மருத்துவ சலுகை கடனுக்கான கிரயம் | - ரூ.400,000.00 |
| மேம்பாடு | - 40% |

### 1.1.5 உளவியல் ரீதியான செயலமர்வுகளை நடாத்துதல் ( குழும உளவளத்துணை)

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகிய அனைவரையும் உள ரீதியாக வலுவூட்டும் பொருட்டு பல்வேறு செயலமர்வுகளும், வேலைத்திட்டங்களும் இந் நிகழ்ச்சித் திட்டத்தினூடாக முன்னெடுக்கப்படுகின்றன.

சுகாதார அமைச்சு, வைத்தியர்கள் மற்றும் மருத்துவ நிறுவனங்கள் ஆகியன ஒன்றிணைந்து இம் மருத்துவப் பரிசோதனைகளை நடாத்தியதுடன், பயனாளிகளுக்கு விழிப்புணர்வூட்டல்கள் மற்றும் மருத்துவப் பரிசோதனைகள் நடத்தப்பட்டன. மருத்துவப் பரிசோதனைகள் நடாத்தப்படும் இடம் மற்றும் திகதி என்பன உரிய மாகாணத்தின் மாகாண அலுவலர் மற்றும் அமைப்புக்களின் அலுவலர்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டன.

தமது அமைப்புக்களின் உறுப்பினர்கள் முகங்கொடுக்க நேரிடுகின்ற பிரச்சினைகள் மற்றும் விழிப்பூட்டல்கள் தேவைப்படும் தலைப்புக்கள் என்பன பற்றி உளநல பிரிவுக்கு அறிவித்தல் வேண்டும். அதனூடாக தகுந்த செயலமர்வுகள் ஏற்பாடு செய்யப்படும்.

#### இலக்கு

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், அவர்களது குடும்பங்களின் நெருங்கிய உறவினர்கள், உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள் ஆகிய அனைவரையும் உள ரீதியாக வலுவூட்டும் பொருட்டு பல்வேறு செயலமர்வுகளையும், வேலைத்திட்டங்களையும் நடாத்துவது இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கமாகும்.

#### இலக்குக் குழு

- ❖ அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், அவர்களது நெருங்கிய உறவினர்கள்,
- ❖ உயிர் நீத்த, காணாமற் போன இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்

வருடாந்த மேம்பாடு

| | |
|---|---|
| 2013 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | - 10 |
| 2013 ஆண்டிற்கான ஒதுக்கீடு | - ரூ. 4,000,000.00 |
| 2013 ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | - 07 |
| மேம்பாடு | - 40% |
| செலவினத் தலைப்புடன் தொடர்புடைய விசேட குறிப்பு | - இவ் ஆண்டிற்காக ஒதுக்கப்பட்ட நிதி முடிவடைந்தன. |

உளவியல் ரீதியான செயலமர்வுகள்

| தொ. இல. | மாகாணம் | மாவட்டம் | இடமும் திகதியும் | நிகழ்ச்சித்திட்டம் | கலந்து கொண் டோர் |
|---|---|---|---|---|---|
| 01 | மேல் மாகாணம் | கொழும்பு | சாலாவ ரணவிரு கிராமம் 2013/08/26 | கல்வித்திட்ட கற்கை செயலமர்வு<br>* *ரணவிரு பிள்ளைகள்* | 58 |
| | | | சாலாவ ரணவிரு கிராமம் 2013/09/19 | உளநல பயிற்சி செயலமர்வு<br>* *அங்கவீனமுற்ற வீரர்கள், அவர்களது மனைவிமார்* | 82 |
| | | கம்பஹா | கம்பஹா பிரதேச செயலகம் 2013.10.14 | சுகாதார விருத்திச் செயலமர்வு<br>* *ரணவிரு மனைவிமார்* | 40 |
| 02 | ஊவா மாகாணம் | மொனராக லை | வெல்லவாய் மல்லத்தாவல தேசிய பாடசாலை 2013/06/19 | உளநல பயிற்சி செயலமர்வு<br>* *ரணவிரு மனைவிமார்* | 41 |
| | | | மொனராகலை பிரதேச செயலகம் 2013/06/20 | உளநல பயிற்சி செயலமர்வு<br>* *ரணவிரு மனைவிமார்* | 69 |
| 03 | வயம்ப | குருனாகலை | கல்கமுவ கலாசார நிலையம் 2013/11/19 | சுகாதார விருத்திச் செயலமர்வு<br>* *அமைப்பு உறுப்பினர்* | 171 |
| | | | நிக்கவரெட்டிய கமநல சேவை பயிற்சி நிலையம் 2013/11/20 | சுகாதார விருத்திச் செயலமர்வு<br>* *அமைப்பு உறுப்பினர்* | 129 |



## உளவியல் செயலமர்வுகள்



சாலாவ ரணவிரு கிராமம் 2013/09/19



கம்பஹா பிரதேச செயலகம்
2013.10.14



கம்பஹா பிரதேச செயலகம்
2013.10.14



வெல்லவாய் மல்லத்தாவல தேசிய
பாடசாலை 2013/06/19



கல்கமுவ பிரதேச செயலகம் 2013/11/19



மொனராகலை பிரதேச செயலகம்
2013/06/20

### 1.1.6 அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்

இராணுவ வீரர்களின் குடும்பங்களுக்கு நலன்புரி வசதிகளை வழங்கும் பொருட்டு உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்குதல், அங்கவீன உபகரணங்களை பாவிக்கும்போது முகங்கொடுக்க நேரிடுகின்ற உடல்சார்ந்த அசௌகரியங்கள் தொடர்பான பொதுவாக கலந்துரையாடல், சரியான உணவுப் பட்டியல் ஒன்றைப் பேணுதல், சிறந்த ஆரோக்கியம், சமுகத்தில் அவர்களுக்கு முகங்கொடுக்க நேருடுகின்ற பல்வேறு வகையான இன்னல்கள் ஆகியன தொடர்பாக மனவுறுதியுடன் அவற்றை முறியடிப்பதற்கான மனநிலையை கட்டியெழுப்புவது தொடர்பான வழிகாட்டல்கள் இதனூடாக வழங்கப்படுகின்றன.

பயனாளிகளுக்கு விழிப்புணர்வூட்டல்கள் வழங்கப்படுவதுடன், செயலமர்வுகள் நடாத்தப்படும் இடம் மற்றும் திகதி என்பன உரிய மாகாணத்தின் மாகாண அலுவலர் மற்றும் அமைப்புக்களின் அலுவலர்களின் மூலம் முன்னெடுக்கப்பட்டன.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்று வீடுகளில் முடக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்களுக்கு உடல், உள ரீதியாக வலுவூட்டும் பொருட்டு இந்நிகழ்ச்சித் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

**இலக்குக் குழு**

அங்கவீனமுற்று வீடுகளில் முடக்கப்பட்டுள்ள இராணுவ வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| 2014 ஆண்டில் எதிர்பார்க்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் | - 10 |
| 2013 ஆண்டிற்கான ஒதுக்கீடு | - ரூ. 4,000,000.00 |
| 2013 ஆண்டில் நடாத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் | - 02 |
| 2013 ஆண்டில் செலவினம் | - ரூ. 325,329.00 |
| இவ் ஆண்டிற்காக மேம்பாடு | 100% |

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களுக்கான பயிற்சிப் பட்டறைகள்







விஹார மகா தேவி மனிதவள அபிவிருத்தி நிலையம், மிரிஜ்ஜவில 2013/12/10, 11











வயம்ப பயிற்சி நிலையம், வாரியபொல 2013/12/18, 19

## செயற்திட்டப் பணிகள் தொடர்பான விசேட குறிப்புக்கள்

### அங்கத்துவ பங்குபற்றல்

பொதுவாக செயற்திட்டங்களில் கலந்துகொள்வதில் இராணு வீரர்களின் பங்களிப்புக்கள் படிப்படியாக குறைந்து வருகின்றன. வருவதாக உறுதியளிப்பவர்கள் கூட வருகை தருவதில்லை. அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களும் மனைவிமாரும் இங்கு முன்னிலை வகிப்பதுடன், பல்வேறு மேலதிக வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்காக ஈடுபட்டுள்ளமை அவதானிக்கப்பட்டது. அப் பணிகளுக்கு முன்னுரிமையளிப்பதன் காரணமாக இவ்வாறு நிகழ்ச்சித்திட்டங்களில் கலந்துகொள்வதில்லை.

## 1.2 அங்கவீனமுற்றவர்களுக்கான நலன்புரிச் செயற்திட்டம்

செயற்பாட்டு நடவடிக்கையின் பொது பல்வேறு உபாதைகளுக்கு உட்பட்டு மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் மற்றும் சேவையில் ஈடுபட்டுள்ள முழுமையாக அங்கவீனமுற்ற இராணுவத்தினரை உள ரீதியாக வலுவூட்டி, அன்றாடம் முகங்கொடுக்க நேரிடுகின்ற பல்வேறு அசெகளரியங்களை களைந்து தமது நாளாந்த பணிகளை இலகுவாக மேற்கொள்வதற்கும் நாட்டின் அபிவிருத்திக்கும் பொருளாதார வளர்ச்சிக்கும் பங்களிப்பு நல்கக்கூடியவர்களாகவும், தன்னம்பிக்கையுடன் பணியாற்றக் கூடியவர்களாக மாற்றியமைப்பதே இதன் நோக்கமாகும்.

### 1.2.1 முச்சக்கரவண்டி வழங்கல்

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் பிரயாணம் செய்யும் போது முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு, பிரயாணங்களை இலகுவாக தொடரவும், நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்வதற்கான ஒரு சந்தர்ப்பமாகவும், இராணுவ வீரர்களை உள ரீதியாகவும், பொருளாதார ரீதியாகவும் வலுவூட்டுவதற்கான சந்தர்ப்பமாகவும் இது அமைகின்றது எனலாம்.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் பிரயாணம் செய்யும் போது முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு,

**இலக்குக் குழு**

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்று மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறசெய்விக்கப்பட்ட இராணுவ வீரர்கள்
- சேவையில் ஈடுபட்டிருந்த வேளை அங்கவீனமுற்று வீடுகளில் தங்கியுள்ள இராணுவ வீரர்கள்

| | |
|---|---|
| கடன் பெறுமதி | - உச்ச தொகை - ரூ.400,000/ |
| அறவிடப்படும் காலஎல்லை | - ஆக கூடியது 04 ஆண்டுகள் (48 தவணை) |
| மாதாந்த தவணை | - ரூபா' 9375'00 |

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - 100 |
| வழங்கப்பட்ட தொகை | - 96 |

### 1.2.2 குளியலறைக்கான உதவியளிப்புக்கள்

பல்வேறு உபாதைகளுக்குள்ளான அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு, துப்புறவேற்பாட்டு (கொமட் / பாதுகாப்பு வேலி) வசதியுடனான குளியலறை ஒன்றை அமைத்துக் கொள்வதற்கு இதன் மூலம் உதவியளிக்கப்படுகின்றது.

## இலக்கு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் பிரயாணம் செய்யும் போது முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு

## இலக்குக் குழு

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது பல்வேறு உபாதைகளுக்குள்ளாகி மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள்
- மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் வீடுகளில் தங்கியுள்ள சேவையில் ஈடுபட்டுள்ள முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையிலுள்ள முழுமையாக அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் (அங்கவீன வீதம் 100)

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை - 200
வழங்கப்பட்ட தொகை - 231

### 1.2.3 அங்கவீனமுற்றோர்களுக்கான உபகரணங்களை வழங்குதல்

அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள், அங்கவீன நிலைமைகள் காரணமாக முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு, அவர்களுக்குத் தேவையான செயற்கை கால், சக்கர நாற்காலி, ஊன்றுகோல், தண்ணீர்ப்பை, செவிப்புல கருவி, சிறுநீர்ப் பை ஆகிய உபகரணங்கள் இந் நாட்டிலும், வெளிநாடுகளிலும் வசிக்கின்ற தனவந்தர்களினால் இதன் கீழ் வழங்கப்படுகின்றன.

## இலக்கு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள் அன்றாட செயற்பாடுகளின் போது முகங்கொடுக்க நேரிடுகின்ற தொல்லைகளை தவிர்க்கும் பொருட்டு

## இலக்குக் குழு

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது பல்வேறு உபாதைகளுக்குள்ளாகி மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வுபெறச் செய்விக்கப்பட்ட முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள்

- சேவையில் ஈடுபட்டுள்ள முழுமையாக அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள்

வருடாந்த மேம்பாடு

| அங்கவீன உபகரணம் | மதிப்பீட்டுத் தொகை | வழங்கப்ட்ட தொகை |
|---|---|---|
| சக்கர நாற்காலி | 100 | 100 |
| ஊன்றுகோல் | 160 | 160 |
| செயற்கை கால் | 93 | 93 |
| சிறுநீர்ப் பை | 02 | 02 (ஆட்கள்) |

## 1.2.4 தனிப்பட்ட ரீதியான உளவளத்துணை

ஒவ்வொரு ஆண்டிலும் உளவள சமூக பிரிவிற்கு தான் மற்றும் தன்னுடைய குடும்ப அங்கத்தவர்களின் உளவள மற்றும் குடும்ப பிரச்சினைகள் சம்பந்தமாக உளவளத்துணை சேவையின் உதவி தேவைப்படும் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியான உதவிகள் இதனூடாக வழங்கப்படுகின்றன.

### இலக்கு

இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பாக தனிப்பட்ட ரீதியான உதவிகளை வழங்குதல்.

### இலக்குக் குழு

இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள் தொடர்பாக

## 1.2.5 உடனடி இடர் உதவிகள் வழங்குதல்

இராணுவ வீரர்கள் மரணமடையும் சந்தர்ப்பத்தில் வழங்கப்படுகின்ற உதவுதொகை ஆகும்.

### இலக்கு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்களுக்கு நிதிசார் சலுகை வழங்கல்.

### இலக்குக் குழு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்களுக்கு

## 1.2.6 அவசர இடர் நிதியுதவி

ரணவிரு அமைப்புக்களின் அங்கத்தவர்கள் அல்லது சேவையில் ஈடுபட்டுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்களில் நிகழ்கின்ற அவசர இடர்நிலைகளின் போது ரூபா 10,000 தொகை துரிதமாக வழங்கப்படுகின்றது.

## இலக்கு

இராணுவ வீரர்களின் குடும்பங்களில் நிகழ்கின்ற அவசர இடர்நிலைகளின் போது நிதியுதவி வழங்குதல்

## இலக்குக் குழு

- அமைப்புக்களின் அங்கத்துவர்கள்
- சேவையில் ஈடுபட்டுள்ள அங்கவீனமுற்ற இராணுவ வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - |
| வழங்கப்பட்ட தொகை | 18 |

# 02

# சமூக மற்றும் கலாசார பிரிவு

## 2.1. அமைப்புக்கள்

2.1.1 மாவட்ட ரீதியாக விழிப்புணர்வூட்டல்

2.1.2 தலைமைத்துவ பயிற்சிப் பட்டறைகளை நடாத்துதல்

2.1.3 அமைப்புக்களின் கோர்வை நிகழ்ச்சித்திட்டங்கள்

2.1.4 அங்கத்துவத்தை தக்கவைத்தல் மற்றும் அமைப்புக்களின் செயற்பாடுகளை நிறைவேற்றல்

2.1.6 கள ஆய்வு மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு

2.1.7 ஆன்மீக மற்றும் சமூகம்சார் நிகழ்ச்சித்திட்டங்கள்

## 2.2. கிராமங்களுக்கான செயற்திட்டம்

2.2.1 உட்கட்டமைப்பு அபிவிருத்தி

2.2.2 மாதிரி இராணுவக் கிராமங்களை உருவாக்குதல்

2.2.3 ரணவிரு கிராம வீட்டுத் தோட்ட பயிர்செய்கை நிகழ்ச்சித் திட்டங்கள்

2.2.4 ரணவிரு கிராம நலன்விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள்

## 2.3 கலாசார செயற்திட்டம்

2.3.1 ரணவிரு சாகித்திய விழா

## 2.1. அமைப்புக்கள்

### 2.1. 1. மாவட்ட ரீதியான விழிப்புணர்வூட்டல்கள்

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரை மாதாந்தம் ஒன்றிணைத்து அவர்களிடையே அன்னியோன்ய உறவுகளையும், புரிந்துணர்வையும் ஏற்படுத்துமுகமாக ரணவிரு அமைப்புக்களின் சுயேட்சை சங்கங்களின் மூலம் அந்தந்த பிரதேசங்களிலுள்ள இராணுவ வீரர்களின் குடும்பங்களை ஒன்றிணைத்து அதனை தொடர்ந்து பேணும் பொருட்டு ரணவிரு அமைப்புக் கூட்டங்களை நடாத்தும் பொறுப்பு மாகாண அலுவலர்களிடம் ஒப்படைக்கப்பட்டன. அதற்கு மேலதிகமாக மூன்று மாதங்களுக்கு ஒரு முறை மாகாண அலுவலர்களினால் மாவட்டக் கூட்டங்களும் ஏற்பாடு செய்யப்பட்டன.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த, காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரிடையே புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் மற்றும் ரணவிரு அமைப்புக்களின் பணிகளை இலகுபடுத்தல்.

**இலக்குக் குழு**

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள்
- காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள்
- அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | 20 |
| வழங்கப்பட்ட தொகை | | 11 |

### 2.1.2. தலைமைத்துவ பயிற்சிப் பட்டறைகள்

ரணவிரு அமைப்புக்களின் செயற்பாடுகள் மற்றும் சமூக செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான ஆளுமை விருத்தியையும், தலைமைத்துவ பண்புகளையும் விருத்தி செய்வதற்கான இந் நிகழ்ச்சித் திட்டத்தினால் அமைப்புக்களின் உறுப்புரிமை வரையிலான பணிகள் முன் னெடுக்கப் படுகின்றன.

### இலக்கு

ரணவிரு அமைப்புக்களின் மூலம் அலுவலர்கள் மற்றும் அங்கத்தவர்களின் ஆளுமை விருத்தி மற்றும் தலைமைத்துவ விருத்தி செயற்பாடுகளை முன்னெடுத்தல்

### இலக்குக் குழு

- ❖ ரணவிரு அமைப்புக்களின் அங்கத்தவர்கள்
- ❖ ரணவிரு அமைப்புக்களின் அலுவலர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | 09 |
| வழங்கப்பட்ட தொகை | | 04 |

## 2.1.3. அமைப்புக்களின் கோர்வை நிகழ்ச்சித்திட்டங்கள்

ரணவிரு அமைப்புக்களின் செயற்திட்டங்களின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்கான ரணவிரு அமைப்புக்களின் மூலம் அல்லது ரணவிரு அமைப்புக்களுடன் பிற நிறுவனங்களும் ஒன்றிணைந்து நெறிப்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது இந் நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களில் ஒன்றாகும். அதற்கமைய அது கோர்வை நிகழ்ச்சித்திட்டமாக இனங்காணப்பட்டுள்ளதுடன், முழுமையான நிகழ்ச்சித்திட்டங்கள் ரணவிரு அமைப்பு அல்லது அமைப்புடன் ஒன்றிணையும் நிறுவனத்தினால் ஏற்பாடு செய்யப்படும். அதற்கு மேலதிகமாக நிகழ்ச்சித் திட்டத்துக்கு பெறுமானம் ஒன்றை வழங்கும் பொருட்டும், அமைப்பின் செயற்பாடுகள் குறித்து வலுவூட்டும் பொருட்டும், ரணவிரு சேவை அதிகார சபையினால் பங்களிப்பு நல்குவது சிறந்ததென மாகாண அலுவலரினால் தீர்மானிக்கப்பட்ட போது அது தொடர்பான பங்களிப்புக்களும் கிடைக்கப்பெற்றன.

### இலக்கு

ரணவிரு அமைப்புக்களின் மூலம் அல்லது ரணவிரு அமைப்புக்களுடன் பிற நிறுவனங்களும் ஒன்றிணைந்து நெறிப்படுத்துகின்ற நிகழ்ச்சித் திட்டங்களுக்கு ஒத்துழைப்பு வழங்குவது. நிகழ்ச்சித் திட்டத்துக்கு பெறுமானம் ஒன்றை வழங்குவது. அமைப்பின் செயற்பாடுகள் குறித்து வலுவூட்டுதல்.

### இலக்குக் குழு

- ❖ ரணவிரு அமைப்புக்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | |
| வழங்கப்பட்ட தொகை | | 10 |

### 2.1.4 அங்கத்துவத்தை பேணல் மற்றும் அமைப்புக்களின் பணிகளை நிறைவேற்றுதல்

ரணவிரு சேவா அதிகார சபைக்கு வருகை தந்து அல்லது எழுத்துமூலம் விடுக்கப்படும் கோரிக்கைகள் மற்றும் ஏனைய அரசாங்க மற்றும் அரச சார்பற்ற அமைப்புக்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற ரணவிரு அதிகார சபையின் நேரடிப் பயனாளிகளின் பிணக்குகள், ரணவிரு அமைப்பு மற்றும் மாகாண அலுவலர்களிடம் சமர்ப்பிக்கப்படுகின்றன. செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள், காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள், அங்கவீனமுற்று ஓய்வுபெறச் செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறுப்பினர்கள் ஆகியோர் ரணவிரு செயன்முறையுடன் ஒன்றிணைக்கப்படும்.

#### இலக்கு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த, காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரை ரணவிரு அமைப்பில் இணைத்துக் கொள்ளல் புரிந்துணர்வை கட்டியெழுப்புதல் மற்றும் ரணவிரு அமைப்புக்களின் பணிகளை இலகுபடுத்தல்

#### இலக்குக் குழு

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த, காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள்
- அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்கள் தொடர்பாக

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | 08 |
| வழங்கப்பட்ட தொகை | | 08 |

### 2.1.5 கள ஆய்வு மற்றும் செயற்திட்ட கண்காணிப்பு

பிரதேச ரீதியாக விசேட தேவைகளை ஏற்படுத்துமுகமாக இராணுவ வீர்ர்களின் வீடுகளுக்குச் சென்று சேவை வழங்கும் பொருட்டு அரையாண்டில் ஏற்பாடு செய்யப்படும் களச் சுற்றுலா, மாகாண அலுவலர் மற்றும் குறித்த அமைப்பின் பங்களிப்புடன் ஏற்பாடு செய்யப்பட்டது.

#### இலக்கு

விசேட தேவைகளையுடைய இராணு வீரர்களின் தேவைப்பாடுகளை அமைப்புக்களில் தலைமையில் அவர்களது வீடுகளுக்கு சென்று ஏற்பாடு செய்தல் '

#### இலக்குக் குழு

- விசேட தேவைகளையுடைய இராணு வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | 07 |
| வழங்கப்பட்ட தொகை | | 07 |

### 2.1.6 ஆன்மீக மற்றும் சமூக நிகழ்ச்சித்திட்டங்கள்

இதன் கீழ் ரணவிரு அமைப்புக்களின் அலுவலர்கள் வருடாந்தம் பல்வேறு பயிற்சிப் பட்டறைகள் மூலம் சமூக மற்றும் ஆன்மீக அடைவுகளைப் பெற்றுக் கொள்கின்றனர். அத்துடன் துறைசார் அறிவு அலுவலர்களினால் அங்கத்தவர்களுக்கு வழங்கப்படுவதுடன், அதற்கு மேலதிகமாக அந்தந்த நிகழ்ச்சித்திட்டங்களுக்கு இணையொத்ததாக அமைப்புக்களின் அங்கத்தவர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. அதற்கமைய ரணவிரு சமூகம் சுயாதீனமாக செயற்படுவதற்கும், போதிய அறிவு மற்றும் புரிந்துணர்வு மற்றும் வலுவூட்டப்பட்டு தன்னம்பிக்கைளைக் கட்டியெழுப்புவது காலத்தின் தேவையாகும். இதனூடாக பயிற்சிப் பட்டறைகள் இதன் கீழ் மேற்கொள்ளப்படும்.

**இலக்கு**

இராணுவ வீரர்களின் சமுக மற்றும் ஆன்மீக விருத்தி'

**இலக்குக் குழு**

ரணவிரு அமைப்புக்களின் அங்கத்தவர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - 10 |
| வழங்கப்பட்ட தொகை | - 10 |

## 2.2 கிராமிய செயற்திட்டங்கள்

" மாதிரி ரணவிரு கிராமம்" இதனூடாக நிர்மாணிக்கப்படும். ரணவிரு கிராமங்களில் வசிக்கின்ற இராணுவ வீரர்களினதும், சமுகத்தினதும் உளநல மற்றும் பௌதீக அபிவிருத்திகளை தோற்றுவித்தல் மற்றும் சமாதானம், ஐக்கியம் என்பனவற்றை விருத்தி செய்வதற்கான பணிகளும் இதனூடாக முன்னெடுக்கப்படும்.

**இலக்கு**

சிறுவர்களது திறமை விருத்தி செய்தல், மாதிரி ரணவிருக் கிராமங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்தல், கலாசார குழுக்களை தோற்றுவித்தல், வீட்டுத் தோட்டங்களை அமைத்தல், சிநேகபூர்வ நிகழ்ச்சித்திட்டங்களை நடாத்துவது என்பன இதன் நோக்கங்களாகும்.

**இலக்குக் குழு**

- ரணவிரு கிராமங்களில் வசிக்கின்ற இராணுவ வீரர்களின் குடும்பங்கள்

### 2.2.1 உட்கட்மைப்பு வசதிகளின் அபிவிருத்தி

ரணவிரு கிராமங்களில் வசிப்பதற்கு ஆரம்பித்தவுடனேயே இராணுவ வீரர்களின் குடும்பங்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை பெற்றுக்கொள்வது சிரமமான காரியமாகும். அதில் பாதைகளை அமைத்தல், மின்சாரம், நீர் பெற்றுக்கொடுத்தல் என்பன தொடர்பாக அதிகார சபையினால் நிதியளிக்கப்பட மாட்டாது. அது தொடர்பாக மத்திய அரசாங்கம் மற்றும் அதன் கீழ் இயங்குகின்ற நிறுவனங்கள் உரிய பணிகளை மேற்கொள்கின்றன.

அவ்வாறே அவர்களது வாழ்க்கைத் தரத்தை உயர்த்தும் நோக்குடன் குழும உணர்வுகளை விருத்தி செய்வது குறித்து முன்னுரிமையளிக்கப்பட்டு மாகாண மட்டத்தில் சனசமுக மண்டபங்களை நிர்மாணிப்பதற்கு ரூபா 4000,000 தொகையும், கிராமங்களுக்கு அவசியமான பொருட்களும் உபகரணங்களும் வழங்கப்படும். முன்னுரிமை அடிப்படையிலும், கிராமமொன்றின் பொதுவான தேவைப்பாடுகளின் அடிப்படையிலும் ஒதுக்கீடுகள் வழங்கப்படும்

**இலக்கு**

ரணவிருக் கிராமங்களுக்கு அவசியமான உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

**இலக்குக் குழு**

- ❖ ரணவிரு கிராமங்களில் வசிக்கின்ற இராணுவ வீரர்களுக்கு

**வருடாந்த மேம்பாடு**

| | | |
|---|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - | 13 |
| வழங்கப்பட்ட தொகை | | 10 |

### 2.2.2 மாதிரி ரணவிரு கிராம உருவாக்கம்

ரணவிருக் கிராமங்களை மனிதநேயமிக்கதும், பௌதீக ரீதியாகவும் சமூக ரீதியாகவும் முன்மாதிரியான கிராமங்களாக உருவாக்கும் நோக்குடன், அதற்கான பௌதீக வளங்களை வழங்குவது தொடர்பாக தயாரிக்கப்பட்டதே திட்டம் எனலாம்.

**இலக்கு**

முன்மாதிரியான ரணவிருக் கிராமங்களை உருவாக்குதல்

**இலக்குக் குழு**

- ❖ ரணவிருக் கிராமங்களில் வசிக்கும் இராணுவ வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை - 05
வழங்கப்பட்ட தொகை 04

### 2.2.3 ரணவிரு கிராம வீட்டுத்தோட்ட பயிர்செய்கை

ரணவிருக் கிராமங்களில் உள்ள வரையறைக்குட்பட்ட நிலப்பரப்பினை உச்சளவில் பயன்படுத்திக கொள்ளும் வகையில் முகாமைப்படுத்தல் மற்றும் அதற்கான செப்பனிடல் பணிகள் இதனூடாக முன்னெடுக்கப்படுகின்றன.

**இலக்கு**

ரணவிருக் கிராமங்களில் வீட்டுத்தோட்ட பயிர்செய்கையை உச்சளவில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் முகாமைப்படுத்தல் மற்றும் அதற்கான செப்பனிடல்

**இலக்குக் குழு**

- ❖ ரணவிருக் கிராமங்களில் வசிக்கும் இராணுவ வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை -
வழங்கப்பட்ட தொகை 01

**புதிய நிகழ்ச்சித்திட்டங்கள்**

கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் ரணவிருக் கிராமங்களில் வசிப்பவர்களுக்கும் இடையில் பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்பக்கூடிய வகையிலான சமூக வலுப்படுத்தலுடன் பொதுவான தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்வதற்கான முன்னாயத்தங்களுடன் தயாரிக்கப்பட்டதே இந் நிகழ்ச்சித் திட்டமாகும்.

**இலக்கு**

ரணவிருக் கிராமங்களில் வசிப்பவர்களுக்கு இடையில் பரஸ்பர புரிந்துணர்வைக் கட்டியெழுப்புதல்.

**இலக்குக் குழு**

- ❖ ரணவிருக் கிராமங்களில் வசிக்கும் இராணுவ வீரர்கள்

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை -
வழங்கப்பட்ட தொகை 16

## 2.3 கலாசார செயற்திட்டம்

**ரணவிரு சாகித்திய விழாவிற்கான ஏற்பாடுகள்**

இராணுவ வீரர்களிடையே கலையார்வத்தை கட்டியெழுப்பும் பொருட்டு தேசிய, மாகாண மற்றும் பிரதேச மட்டத்தில் ரணவிரு கலை இலக்கிய படைப்புக்கள் தொடர்பாக ஆர்வமூட்டல் மற்றும் வருடாந்தம் போட்டிகள் நடாத்தப்பட்டு திறமைகள் மற்றும் தேர்ச்சிகள் இதன் மூலம் மதிப்பிடப்படுகின்றன.

## இலக்கு

ரணவிரு குடும்ப உறுப்பினர்களதும், இராணுவ வீரர்களினதும் கலை இலக்கிய படைப்புக்கள் தொடர்பாக ஆர்வமூட்டும் பொருட்டு இந்நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

## இலக்குக் குழு

- இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களது குடும்ப அங்கத்தவர்கள்

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - 01 |
| வழங்கப்பட்ட தொகை | 01 |

# 03

# இராணுவத்தினருக்கான அபிமானம் மற்றும் கௌரவப்படுத்தல் பிரிவு

## 3.1 இராணுவத்தினருக்கான ஞாபகார்த்த செயற்திட்டம்

3.1.1 தேசிய ரணவிரு தின விழா
3.1.2 மாகாண ரணவிரு மாநாடு
3.1.3 'உத்தம பூஜா பிரணாம பதக்கம்' விழா
3.1.4 வெளியார் நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்
3.1.5 பொதுவான நலன்புரிச் செயற்பாடுகள்
3.1.6 மைலப்பிட்டிப் பூங்காவின் பேணல் பணிகள்

## 3.2. காணிச் செயற்திட்டம்

## 3.1. இராணுவத்தினருக்கான ஞாபகார்த்த செயற்திட்டம்

தாய்நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுத்து, அதனைப் பாதுகாத்து நிறுகின்ற இராணுவ வீரர்களின் திருநாமம் எமது சமுகத்தில் வேரூன்றிப் பதியும் வண்ணம் மற்றும் அவர்களை கௌரவப்படுத்தும் பொருட்டு தயாரிக்கப்பட்டதே இச் செயற்திட்டமாகும்.

**இலக்கு**

01. சமூகத்தில் இராணுவ வீரர்களின் திருநாமம் என்றென்றும் நினைவுகூரப்படுதல்
02. அபிமானத்துடன் கூடிய ரணவிரு சமூகனெறைக் கட்டியெழுப்புதல்

### 3.1.1. தேசிய ரணவிரு தின விழா

இந் நாட்டின் ஒருமைப்பாடு, இறையாண்மை மற்றும் அனைத்து மக்களினதும் பாதுகாப்பு ஆகியவற்றுக்காக தமது இன்னுயிர் நீத்த, அஞ்சா நெஞ்சம் கொண்ட 'ரணவிரு' எனும் திருநாமத்தை நினைவுகூரும் பொருட்டும், தேசத்தின் கௌரவத்தை அவர்களுக்கு சமர்ப்பனம் செய்யும் பொருட்டும் செயற்படுத்தப்பட்டது.

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை - 01
வழங்கப்பட்ட தொகை 01

### 3.1.2. மாகாண ரணவிரு மாநாடு

இராணுவ வீரர்கள் மற்றும் உறவினர்களை, அந்தந்த மாகாண மட்டத்தில் ஒன்றிணைத்து அவர்களிடையே நிலவுகின்ற பிரச்சினைகள் மற்றும் அவர்களது முன்மொழிவுகள் என்பனவற்றை பெற்றுக்கொண்டு மாகாண ரீதியாக இவ் அங்கத்தவர்களின் நலன்புரி நடவடிக்கைகளை கட்டியெழுப்பும் பொருட்டு செயற்படுத்தப்படுகின்றது.

**வருடாந்த மேம்பாடு**

எதிர்பார்க்கப்பட்ட தொகை - 07
வழங்கப்பட்ட தொகை 07

### 3.1.3 'உத்தம பூஜா பிரணாம பதக்கம்' விழா

தாய்நாட்டிற்கு சுதந்திரத்தைப் பெற்றுக் கொடுக்கும் பொருட்டு பயங்கரவாதிகளுக்கு எதிராக போரிட்டு தம் இன்னுயிர் நீத்த இராணுவ வீரர்களை கௌரவப்படுத்துமுகமாக அவர்களது நெருங்கிய உறவினர்களுக்கு அன்பளிப்புக்களை வழங்கும் பொருட்டு தயாரிக்கப்பட்ட விசேட நிகழ்ச்சித்திட்டமாகும்.

**இலக்கு**

தாய்நாட்டிற்காக தம் இன்னுயிர் நீத்த இராணுவ வீரர்களை கௌரவப்படுத்துதல்

**இலக்குக் குழு**

- ❖ இன்னுயிர் நீத்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்.

### 3.1.4. வெளியார் நிறுவனங்களுடன் இணைந்து நடாத்தப்படும் நிகழ்ச்சித் திட்டங்கள்

இந் நாட்டின் இராணுவ வீரர்களுக்காக ஏனைய நிறுவனங்கள் / அமைப்புக்கள் ஆகியவற்றின் மூலம் பல்வேறு சமய நிகழ்வுகள், ஞாபகார்த்த நிகழ்வுகள், அஞ்சலி நிகழ்வுகள் என்பனவும் (இராணுவ வீரர்களின் உறவினர்கள் சம்பந்தமாகவும்) ஏற்பாடு செய்யப்பட்டிருந்தன.

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - |
| வழங்கப்பட்ட தொகை | 10 |

### 3.1.5 பொதுவான நலன்புரிச் செயற்பாடுகள்

செயற்பாட்டு நடவடிக்கையின் போது உயிர்நீத்த, காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரிடையே நிலவுகின்ற பொதுவான பிரச்சினைகளை தீர்த்து வைப்பதற்கு ஒத்துழைப்புக்கள் வழங்கப்படுகின்றன.

**இலக்கு**

உயிர்நீத்த, அங்கவீனமுற்ற, ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப உறவினர்கள் ஆகியோரிடையே நிலவுகின்ற பொதுவான பிரச்சினைகளை தீர்த்து வைத்தல்

**இலக்குக் குழு**

- ❖ அங்கவீனமுற்று, ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின்
- ❖ அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின்
- ❖ உயிர்நீத்த இராணுவ வீரர்களின் உறவினர்கள் .

**வருடாந்த மேம்பாடு**

| | |
|---|---|
| எதிர்பார்க்கப்பட்ட தொகை | - |
| வழங்கப்பட்ட தொகை | 637 |

### 3.1.6. மைலப்பிட்டிப் பூங்காவின் பேணல் பணிகள்

இந் நாட்டை கொடிய பயங்கரவாத யுத்தத்தில் இருந்து மீட்டெடுப்பதற்காக தன் இன்னுயிர் நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூரும் பொருட்டு நிர்மாணிக்கப்பட்ட இலங்கையின் முதலாவது ரணவிரு பூங்காவின் பேணல் பணிகள் இதனூடாக முன்னெடுக்கப்படுகின்றது.

## 3.2. காணி செயற்திட்டம்

ரணவிரு சேவா அதிகார சபையினால், இராணுவ வீரர்கள் மற்றும் அக் குடும்பங்களுக்கு வீடுகளை நிர்மாணித்து, வசிப்பதற்குத் தகுந்த காணிகளை வழங்குதல் போன்ற தொழிற்பாடுகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனினும், பெரும்பாலும் வீடமைப்பதற்காக சலுகைக் கடன் வழங்கப்பட்ட போதிலும், அவ்வாறு வீடுகளை அமைத்துக் கொள்வதற்கு அவர்களிடம் காணிகள் இல்லாதிருக்கின்றன. அவ்வாறான சந்தர்ப்பங்களில் இராணுவ வீரர் மற்றும் அவரது குடும்பத்தினர் பெரும் அசௌகரியங்களுக்கு உட்படுகின்றனர். காணி இல்லாதிருப்பதனால் ஏனைய நலன்புரி தேவைப்பாடுகளை பெற்றுக் கொள்வதிலும் தடைகள் ஏற்படுகின்றன.
அதற்கமைய ரணவிரு சேவா அதிகார சபையினால் காணிச் செயற்திட்டம் உருவாக்கப்பட்டதுடன், அதனூடாக 2002 ஆம் ஆண்டில் நேரடியாக 500 இற்கு அதிகமான காணித் துண்டங்கள் வழங்கப்பட்டுள்ளன. 7500 இற்கு அதிகமாக மறைமுகமாக காணிகளை பெற்றுக் கொள்வதற்கு ஒத்துழைப்புக்களும் வழங்கப்பட்டுள்ளன.

### இலக்கு

காணிகளற்ற இராணுவ வீரர்கள் மற்றும் குடும்பங்களை இனங்கண்டு, அவர்களுக்கு வசிப்பதற்குத் தகுந்த சுற்றுச் சூழலுடன் கூடிய அரசுடமை அல்லது தனியார் காணித்துண்டங்களை வழங்குவதும், இராணுவ வீரர்களுக்கு வழங்கமுடியுமான அரசாங்க அல்லது பிற காணிகளை இனங்கண்டு அவர்களிடையே பகிர்ந்தளித்தல் மற்றும் அக்காணிகளை மேம்படுத்தல்

### இலக்குக் குழு

- காணாமற்போன இராணுவ வீரர்களுக்காக.
  - திருமணமான இராணுவ வீரர்களுக்காக மனைவி/பிள்ளைகள்/தாய்/தகப்பன்
  - திருமணமாகாத இராணுவ வீரர்களுக்காக தாய்/தகப்பன்
- அங்கவீனமுற்று சேவையில் இல்லாத இராணுவ வீரர்கள்
- அங்கவீனமுற்று சேவையிலுள்ள இராணுவ வீரர்கள்

## செயற்திட்டத்தின் மேம்பாடு - பொழிப்பு

| தொ.இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த செயற்திட்ட மேம்பாடு |
|---|---|---|
| 01 | காணிச் கச்சேரி நடாத்துதல் | 05 |
| 02 | காணி அபிவிருத்திப் பணிகள் | 04 |
| 03 | காணி கண்காணிப்பு பணிகள் | 09 |
| 04 | காணி அனுமதிப்பத்திரங்கள் | 108 |
| 05 | காணி சுவீகரிப்பு | 01 |

# 04

# கல்விசார் திறன்கள் மற்றும் பொருளாதார அபிவிருத்திப் பிரிவு

4.1 திறன்சார் அபிவிருத்தித் திட்டம்

4.1.1 நவீன கனணி நிலையம் மற்றும் காணப்படும் கனணி நிலையங்களை அபிவிருத்தி செய்தல்.

4.1.2 கனணி நிலையங்களில் காணப்படும் போதனாசிரியர்களைப் பயிற்றுவித்தல்.

4.1.3 கல்வி மற்றும் தொழில்சார் பயிற்சி பாடநெறிகளுக்கான அரை புலமைப் பரிசில்களைப் பெற்றுக்கொடுத்தல்.

4.1.4 கம்மான மற்றும் சங்சதவில் நடனங்கள் / கீதங்கள்/ முன்பள்ளிகள்/ கலாச்சார / மொழிகள் தொடர்பான பாடநெறிகளை நடாத்துதல் .

4.1.5 கல்வி நடவடிக்கைகளுக்காக வெளிநாடு செல்வதற்கான கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்.

4.1.6 சுயதொழில்களுக்கான செயலமர்வுகளை நடாத்துதல்.

4.1.7 சுயதொழில்களுக்கான நன்கொடைகளை பெற்றுக் கொடுத்தல்.

4.1.8 சுயதொழில்களுக்கான கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல்.

4.2. வீடமைப்புத் திட்டங்கள்

4.2.1. சங்சத வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்.

4.2.2. கம்மான வீடமைப்புக் கடன்களைப் பெற்றுக்கொடுத்தல்.

4.3. கல்விசார் புலமைப்பரிசில் திட்டங்கள்.

4.3.1. ரணவிரு தூ தரு சேமிப்பு முதலீட்டு புலமைப்பரிசில் முறைமை.

4.3.3. கா.போ. த சா/ தரம் மற்றும் உயர் தரம்.

4.3.3. உயர் கல்விக்கான புலமைப்பரிசில்.

4.4 பெற்றோர் பாதுகாவலர்த் திட்டம்

4.4 வீடமைப்பு நன்கொடைத் திட்டம்

4.6 பெற்றோர் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்

### 4.1 திறன்கள் அபிவிருத்தித் திட்டங்கள்

எமது தேசத்தின், மக்களின் பாதுகாப்பிற்காக உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் தற்போது கடமையாற்றும் இராணுவத்தினரின் குடுபத்தவர்களின் திறமைகள், திறன்கள் மற்றும் கல்வித் தகைமைகளுக்கு ஏற்ப பல்வேறுபட்ட துறைகளில் நடைமுறைக் கோட்பாட்டு அறிவினைப் பெற்றுக்கொடுத்து, இயலுமைகளை விருத்தி செய்து அவர்களிடம் உழைக்கும் ஆற்றலினை கட்டியெழுப்புவது இதனூடாக மேற்கொள்ளப்படுகின்றது.

#### இலக்கு

- இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களினுள் மனப்பாங்கு ரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவதன் மூலம், அவர்கள் தன்னம்பிக்கையுடைய திறன்களுடன் கூடிய குழுமத்தினை உருவாக்குதல்.
- இராணுவத்தினரின் குடும்ப உறுப்பினர்களின் திறமைகள் மற்றும் திறன்களின் அடிப்படையில் பயிற்சியின் அவசியப்பாடுகளை இனங்கண்டு கைத்தொழில் மற்றும் தொழிநுட்டப அறிவு, பயிற்சிக்கான வழிகாட்டல்கள் மற்றும் சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொடுத்தல்.
- தொழில்களில் ஈடுபடுத்துதல், சுயதொழிலின் பால் ஊக்குவித்தல்.
- இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களின் சிக்கனத்தன்மையினை விருத்திசெய்தல் மற்றும் சேமிப்பினை மேம்படுத்தல்.

#### இலக்குக் குழு

- செயற்பாடுகளின் போது உயிர்நீத்த இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்கள்
- காணாமற் சென்ற இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்கள்
- அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்கள்
- தற்போது சேவையில் கடமையாற்றும் இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களுக்காகவுமாகும்.

### 4.1.1. புதிய கணனி நிலையங்களை தாபித்தல் மற்றும் தற்போது காணப்படும் கனணி நிலையங்களை விருத்தி செய்தல்

இராணுவத்தின் பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கனணி அறிவினை விருத்தி செய்து அவர்களை நவீன உலகத்தின் பல்வேறுபட்ட தொழிநுட்ப இயலுமைகளுடன் ஒன்றரக்கலத்தலானது திறன்கள் மேம்பாட்டுத் திட்டத்தின் மற்றதோர் உன்னத பணியாகும். 2013 ஆம் ஆண்டினுள் 55 கனணி நிலையங்களுக்கு மேல் இலங்கை பூராகவும் மிகவும் வெற்றிகரமாக நடாத்தப்பட்டு வருகின்றது.

கணனி நிலையங்களின் பராமரிப்பு நடவடிக்கைகளில் அதிகமானவை திட்டத்தின் அறிவு மற்றும் திறன்களைப் பயன்படுத்தி கூடுதலான செலவீனங்கள் எதுவுமின்றி நடாத்துவதற்கு முடியுமாக இருந்தது. கணனி நிலையங்களின் முன்னேற்றம் தொடர்பாக பரிசோதித்துப் பார்க்கும் நடவடிக்கைகள் இவ்வருடத்திலும் இடம்பெற்றதோடு அவற்றின் முன்னேற்றம் மற்றும் குறைபாடுகள் அதிகாரசபையின் தலைவர் திட்ட முகாமையாளர் மற்றும் குறித்த பிரதேச அலுவலர்களுக்கு எழுத்து மூலமாக அறிவிக்கப்பட்டுள்ளது. அவ்வாறே கணனி நிலையங்களின் போதனாசியர்களுக்கான கொடுப்பனவு குறித்த மணித்தியாள எண்ணிக்கையினை கணக்கிட்டு ( மாதம் ஒன்றிற்கு 50 மணித்தியாளங்கள்) பூரணப்படுத்திய கற்பித்தல் நடவடிக்கையினை மேற்கொள்ளும் போதனாசிரியர்களுக்கு மாத்திரம் வழங்கப்படும்.

**இலக்கு**

இராணுவத்தினரின் பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கணனி அறிவினை விருத்தி செய்து அவர்களுக்கு நவீன தொழிநுட்ப அறிவுடன் வேலை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தினை ஏற்படுத்திக் கொடுத்தல்.

**இலக்குக் குழு**

- இராணுவத்தினரின் பிள்ளைகள்
- அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினர்கள்

**வருடாந்த மேம்பாட்டுஅறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :

2013 வருடத்தின் மேம்பாடு : 10

### 4.1.2. கணனி நிலையங்களின் போதனாசிரியர்கள் பயிற்றுவித்தல்

இப்பயிற்சிப் பாடநெறியானது நாடு பூராகவும் பரந்து காணப்படும் இராணுவக் கிராமங்களில் காணப்படும் கணனி நிலையங்களில் போதனாசிரியர்களைப் பயிற்றுவிக்கும் நோக்கத்தில் நடாத்தப்படுகின்றது.

இப்பாடநெறியினில் Advanced Features Of Microsoft Office, Photoshop, Database Management,Computer Networking, Computer Viruses And Trauble Shooting, Computer Hardware போன்ற பாடத் துறைகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

**இலக்கு**

போதனாசிரியர்களிடம் காணப்படும் அறிவினை நாளதுவரைப்படுத்துதல்.

**இலக்குக் குழு**

இராணுவக் கிராமத்தில் காணப்படும் கணனி நிலையங்களின் போதனாசிரியர்களுக்காளது.

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :01

2013 வருடத்தின் மேம்பாடு : 01

### 4.1.3. கல்வி மற்றும் தொழிற் பயிற்சி பாடநெறிகளுக்கான பகுதி அளவில் புலமைப்பரிசில்களைப் பெற்றுக்கொடுத்தல்

இராணுவத்தினரின் குடும்பப் பிள்ளைகளின் கைத்தொழில் மற்றும் தொழிநுட்பக் கல்வியினை மற்றும் தொழில் நிபுணத்துவத்தினை மேம்படுத்தி அவர்களை எதிர்காலத்தில் வெற்றிகரமான தொழில் வாய்ப்பினை நோக்கி ஈடுபடுத்துவதனை நோக்காகக் கொண்டு ரணவிரு சேவை அதிகாரசபையின் திறன் விருத்தித் திட்டத்தின் மூலம் கல்வி மற்றும் தொழிற்சார்

பாடநெறிகளுக்காக பகுதியளவில் புலமைப்பரிசில்களை பெற்றுக்கொடுத்தல் இடம்பெறுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் இலங்கையின் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் யாதேனும் ஒரு பாடநெறியினை பின்தொடர்வதற்காக அப்பாடநெறியின் கட்டணத்தின் ( பணமாக ரூபா. 30,000 இன் அதிகபட்சத்தின் கீழ்) அரைப்பகுதியினை அதிகார சபை மூலம் கொடுப்பனவு செய்யப்படும்.

**இலக்கு**

இராணுவத்தின் குடும்பப் பிள்ளைகளின் கைத்தொழில் மற்றும் தொழில்நுட்ப திறன்களை மேம்படுத்தல்.

**இலக்குக் குழு**

- செயற்பாடுகளின் போது உயர்நீத்த இராணுவத்தினரின் பிள்ளைகள்
- காணாமற் சென்ற இராணுவத்தினரின் பிள்ளைகள்
- யுத்தத்தினால் ஊனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்காக.

இப்பிரிவின் மூலம் செயற்பாடுகளின் போது உயிர்நீத்த, காணாமற் சென்ற, யுத்தத்தினால் ஊனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் விசேட நிகழ்வுகளுக்காக முன்னுரிமைக் கடிதங்கள் வெளியிடப்பட்டுள்ளது.

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

| | |
|---|---|
| 2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு | :50 |
| 2013 வருடத்தின் மேம்பாடு | : 51 |

### 4.1.4. கம்மான மற்றும் சங்சதவுகளில் நடனங்கள் / சங்கீதங்கள் / முன்பள்ளிகள்/ கலாச்சார / மொழிகள் தொடர்பான பாடநெறிகளை நடாத்துதல்

கிராமங்களில் காணப்படும் பிள்ளைகளின் கலை ஞானத் திறமை மற்றும் பல்வேறுபட்ட துறைகளுக்கான திறன்களை விருத்தி செய்வதற்காக தேவைப்படும் நிதிப் பங்களிப்பு மற்றும் ஆலோசனைகளை வழங்கி அதற்காக பிள்ளைகளை ஈடுபடுத்துவதற்காக இந்நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

நடனங்கள் / சங்கீதங்கள் / முன்பள்ளிகள் / ஆங்கில மொழிக் கல்வி போன்ற பாடநெறிகள் இதன் கீழ் நடைபெறுகின்றது. அவ்வாறே ஆங்கில மொழி நிலையங்களின் விரிவுரைகளுக்கான கொடுப்பனவுகளைச் செலுத்தல் குறிப்பிட்ட மணித்தியாள எண்ணிக்கைக்கு ( ஒரு மாதத்திற்கு 16 மணித்தியாளங்கள்) முழுமைப்படுத்தி கல்வி நடவடிக்கைகயை மேற்கொள்ளும் போதனாசிரியர்களுக்கு மட்டும் செலுத்தப்படும். விரிவுரைக் கொடுப்பனவாக மாதம் ஒன்றிற்கு பணமாக ரூபா. 4000.00 வழங்கப்படும்.

**இலக்கு**

இராணுவத்தின் குடும்பப் பிள்ளைகளின் கலை மற்றும் மொழி ஞானத்தினை விருத்தி செய்தல்.

**இலக்குக் குழு**

- செயற்பாடுகளின் போது உயிர்நீத்த இராணுவத்தினரின் பிள்ளைகள்
- காணாமற் சென்ற இராணுவத்தினரின் பிள்ளைகள்
- யுத்தத்தினால் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தின் பிள்ளைகளுக்காக.

### 4.1.5. கல்வி நடவடிக்கைளுக்காக வெளிநாடு செல்வதற்கான கடன் வசதிகளைப் பெற்றுக்கொடுத்தல்

இலங்கையின் ஐக்கியத்தினை பாதுகாக்கும் வகையில் தங்களது நாட்டிற்காக வேண்டி துணிச்சலான முயற்சியுடன் ஈடுபட்டிருக்கும் முப்படை வீரர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்கள் மற்றும் அவர்களிடம் தங்கி வாழ்பவர்களைப் போன்றே உயிர்த்தியாகம் செய்த, காணாமற் சென்ற முப்படை வீரர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கிட்டிய உறவினர்கள் மற்றும் அங்கவீனமுற்று ஓய்வு பெறுபவர்கள் மற்றும் அவர்களிடத்தில் தங்கிவாழ்வோரின் திறமைகளை விருத்தி செய்வதற்காக பொருளாதார ரீதியாக வலுவூட்டும் நோக்கத்தில் சலுகை அடிப்படையில் நிதி உதவியை வழங்குகின்றது.

- ❖ கல்விசார் திறன்களை விருத்தி செய்வதற்காக வெளிநாடு செல்வதற்கு அவசியப்படும் நிதியுதவியினை வழங்குவதற்காக
- ❖ கல்விசார் உபகரணங்களினை பெற்றுக் கொள்வதற்காக வேண்ட

**இலக்கு**

செயற்பாடுகளின் போது உயர்நீத்த இராணுவத்தினரின் குடும்பங்கள், யுத்தத்தினால் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் தங்கி வாழ்வோரின் திறமைகளை விருத்தி செய்வதற்காக பொருளாதார ரீதியாக பலப்படுத்தும் நோக்கில் சலுகை அடிப்படையின் கீழ் நிதியுதவியினை வழங்குதல்.

**இலக்குக் குழு**

01. செயற்பாடுகளின் போது உயர்நீத்த இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் தங்கிவாழ்வோர்
02. செயற்பாடுகளின் போது காணாமற் சென்ற இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் தங்கிவாழ்வோர்
03. செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள் மற்றும் தங்கிவாழ்வோர்

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :
2013 வருடத்தின் மேம்பாடு : 02

### 4.1.6. சுயதொழில் தொடர்பான செயலமர்வுகளை நடாத்துதல்

இலங்கையின் பல்வேறுபட்ட பிரதேசங்களில் அவர்களுக்கே உரித்தான பல்வேறுபட்ட சுயதொழில்களை இனங்கண்டு அவற்றினை சுயதொழில்களாக ஆரம்பம் செய்வதற்கு விருப்பத்தினை தெரிவிக்கும் இராணுவக் குடும்பங்களிற்கு குறித்த துறை தொடர்பாக அறிவினைப் பெற்றுக்கொடுப்பது இதன் கீழ் இடம்பெறும்.

**இலக்கு**

பல்வேறுபட்ட பிரதேசங்களிற்கு உரித்தான சுயதொழில்களை ஆரம்பம் செய்வதற்கு விருப்பத்தினைத் தெரிவிக்கும் இராணுவத்தினரின் குடும்பங்களிற்கு வழிகாட்டுதல்.

**இலக்குக் குழு**

- செயற்பாடுகளின் போது உயர்நீத்த இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு
- காணாமற் சென்ற இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு
- யுத்தத்தினால் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்களுக்கு

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :05
2013 வருடத்தின் மேம்பாடு : 04

### 4.1.7. சுயதொழிலிற்கான நிதியுதவியினைப் பெற்றுக்கொடுத்தல்.

உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தின் குடும்ப உறுப்பினர்களுக்கு மற்றும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது செயற்பாடுகள் ஏதும் இன்றிய காரணத்தினால் இறந்த, அங்கவீனமுற்றவர்கள் பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட இராணுவக் குடும்ப அங்கத்தவர்களுக்கு சுயதொழில் ஒன்றினை ஆரம்பித்தல் மற்றும் விருத்தி செய்து கொள்வதற்காக உதவிகளை பெற்றுக்கொடுத்தல் இதன் மூலம் இடம்பெறுகின்றது.

**இலக்கு**

செயற்பாடுகளின் போது உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவக் குடும்ப அங்கத்தவர்களுக்கு மற்றும் சேவையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் போது செயற்பாடுகள் ஏதும் இன்றிய காரணத்தினால் இறந்த, அங்கவீனமுற்ற இராணுவக் குடும்ப அங்கத்தவர்களை பொருளாதார ரீதியாக வலுவூட்டுவதற்காகும்.

**இலக்குக் குழு**

- செயற்பாடுகளின் போது உயர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறுபவர்களின் பொருளாதார நெருக்கடிகள் கொண்ட இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்கள்
- செயற்பாடுகள் ஏதும் இன்றி இறந்த, அங்கவீனமுற்றவர்களின் பொருளாதார நெருக்கடிகளைக் கொண்ட இராணுவத்தினரின் குடும்ப அங்கத்தவர்கள்.

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :30
2013 வருடத்தின் மேம்பாடு : 40

### 4.1.8. சுயதொழில் வாய்ப்பிற்கான கடன் வசதியினைப் பெற்றுக் கொடுத்தல்

சுயதொழில் ஒன்றினை மேற்கொள்ளும் போது மூலதனமாக ஒரு தொகைப் பணம் சுயதொழில் செய்பவரிடம் இருத்தல் வேண்டும். என்றாலும் யாதேனும் ஒருவர் சுயதொழிலினை சிறிதொரு தொகையினை ஈடுபடுத்தி வியாபாரத்தினை ஆரம்பிப்பது முன்னேற்றமடைய வேண்டும் என்ற அவாவினாலாகும். அதனைப் படிப்படியாக விருத்தி செய்து கொள்வதற்காக சில சந்தர்ப்பங்களில் நவீன உபகரணங்கள் மற்றும் செலவுகள் தொடர்பான முகாமைத்துவ அறிவினைப் பெற்றிருப்பது அவசியமாகும். அதன் காரணமாக இச்சந்தர்ப்பங்களில் அவர்களின் தொழில் நடவடிக்கைகளினை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்காக ஏதேனும் உதவியினைப் பெற்றுக்கொடுப்பது ரணவிரு சேவை அதிகாரசபையின் பொறுப்பாகக் கருதப்படுகின்றது. அதனால் அவர்களை ஆதரவளிக்கும் வகையில் சுயதொழில் கடன் திட்டம் செயற்பாட்டிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது.

**இலக்கு**

இலங்கையின் ஐக்கியத்தினை பாதுகாக்கும் வகையில் தங்களது நாட்டிற்காக வேண்டி உயிர்த்தியாகம் செய்த, காணாமற் சென்ற முப்படை வீரர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களின் கிட்டிய உறவினர்கள் மற்றும் செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெறும் முப்படை வீரர்கள் மற்றும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்காக சுயதொழில் வாய்ப்பினை ஆரம்பம் செய்வதற்கு மற்றும் விருத்தி செய்வதற்காக சலுகை அடிப்படையில் நிதி உதவியை வழங்கும் நோக்கத்துடன் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

**இலக்குக் குழு**

01. செயற்பாடுகளின் போது உயிர்த்தியாகம் செய்த இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
02. செயற்பாடுகளின் போது காணாமற் சென்ற இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
03. செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :30
2013 வருடத்தின் மேம்பாடு : 35

## 4.2 வீடமைப்புக் கடன் திட்டம்

### 4.2.1. சங்சத வீடமைப்பு கடன் வசதியினைப் பெற்றுக்கொடுத்தல்

சங்சதவில் இணைந்துள்ள இராணுவத்தினர்களுக்கு சங்சதவின் மூலம் வீடமைப்புக் கடன் வசதியினைப் பெற்றுக் கொள்ளும் வாய்ப்பு இதன் கீழ் இடம்பெறும்.

### இலக்கு

இராணுவத்தினரின் குடும்பங்களை பொருளாதார அடிப்படையில் மற்றும் மனோநிலை அடிப்படையில் கட்டியெழுப்புவதற்காக வீடமைப்புக் கடன் திட்டத்தின் கீழ் சலுகை அடிப்படையில் கடனினைப் பெற்றுக்கொடுப்பது இதன் நோக்கமாகும்.

**கடன் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள்**

- புதிய வீடொன்றினைக் கட்டுதல்
- தற்போதுள்ள வீட்டினை மேம்படுத்துதல்
- வீட்டின் பழுதுகளை திருத்தி அமைத்தல்

### இலக்குக் குழு

01. செயற்பாடுகளின் போது உயர்நீத்த இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
02. செயற்பாடுகளின் போது காணாமற் சென்ற இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
03. செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெற்ற இராணுவத்தினர்
04. செயற்பாடுகளின் போது ஏனைய காரணங்களினால் இறந்தவர்களின் கிட்டிய உறவினர்கள்

| கடன் முறைமை | எதிர்பார்க்கப்படும் அளவு | பெற்றுக் கொடுக்கப்படும் அளவு |
|---|---|---|
| சங்சத வீடமைப்புக் கடன் வழங்கல் | 300 | 317 |
| சேவையாற்றும் இராணுவத்தினருக்கு வீடமைப்புக் கடன் வழங்கல் | 35 | 35 |

### 4.2.2. கம்மான வீடமைப்பு கடன் வசதியினைப் பெற்றுக்கொடுத்தல்

ரணவிரு கம்மானவில் வீடுகள் கிடைக்கப்பெற்ற இராணுவத்தினருக்கு அவர்களின் சமையலறையின் வேலைகளை பூர்த்தி செய்து கொள்வதற்காக வீட்டுக் கடன் வசதியினைப் பெற்றுக்கொடுப்பது இதன் கீழ் இடம்பெறுகின்றது.

### இலக்கு

ரணவிரு கம்மானவில் வீடுகள் கிடைக்கப்பெற்ற இராணுவத்தினருக்கு அவர்களின் சமையலறையுடன் வீட்டின் ஏனைய வேலைகளையும் பூர்த்தி செய்து கொள்வதற்காக வீட்டுக் கடன் வசதியினைப் பெற்றுக்கொடுத்தலாகும்.

**கடன் தொகை வழங்குவதற்கான நிபந்தனைகள்**

- புதிய வீடொன்றினைக் கட்டுதல்
- தற்போதுள்ள வீட்டினை மேம்படுத்துதல்
- வீட்டின் பழுதுகளை திருத்தி அமைத்தல்

### இலக்குக் குழு

01. செயற்பாட்டின் போது உயிர்நீத்த இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
02. செயற்பாட்டின் போது காணாமற் சென்ற இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்கள்
03. செயற்பாட்டின் போது அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினர்கள்
04. தற்போது சேவையில் கடமையாற்றும் ரணவிரு கம்மானவில் வதியும் இராணுவத்தினர்கள்

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :35
2013 வருடத்தின் மேம்பாடு : 29

### 4.3 கல்விசார் புலமைப் பரிசில் திட்டம்

தேசத்தினதும் மக்களினதும் பாதுகாப்பிற்காக செயற்பாட்டுச் சேவைகளில் ஈடுபட்டுக்கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில் உயிர்களைத் துறந்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் தற்போது சேவையாற்றும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கையினை உயர் கல்வி வரை வெற்றியடைய உதவும் வகையில் ரணவிரு சேவை அதிகார சபையினால் கல்விசார் புலமைப் பரிசில் திட்டம் நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

### 4.3.1. ரணவிரு தூ தரு சேமிப்பு முதலீட்டுப் புலமைப்பரிசில் முறைமை

2005 ஆம் ஆண்டில் இருந்து ஆரம்பிக்கப்பட்ட இது தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து இராணுவத்தினரின் 6 ஆம் தரம் தொடக்கம் கா.போ.சாதாரண தரப் பரீட்சை வரை கல்வி கற்கும் மாணவர்களுக்காக செயற்படுத்தப்பட்டு வருகின்றது. இம்மாணவர்களின் கா.போ. சாதாரண தரப் பரீட்சை நடவடிக்கைகள் மற்றும் உயர் கல்வி நடவடிக்கைகளுக்காக ரூபா.12,000/- சேமிப்புத் தொகையாக இப்புலமைப் பரிசிலினால் வழங்கப்படுகின்றது.

ரணவிரு சேவை அதிகார சபையின் கல்விசார் புலமைப் பரிசில் திட்டத்தின் கீழ் கா.போ. சாதாரண தரப் பரீட்சை மற்றும் உயர் தரப் பரீட்சையினை மேற்கொள்ளும் மாணவர்களுக்கான புலமைப் பரிசில் திட்டத்தின் முறைமையினுள் உள்ளடக்க எதிர்பார்க்கப்படும் உச்ச திறமைகளைக் கொண்ட அதாவது 5 ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்களுக்கான முதலீட்டுக்கு முன்னதாக அவர்களின் குறை வயதினிலே சேமிப்புக் கணக்கினை ஆரம்பித்து அடிப்படைத் தொகையொன்றினை ரணவிரு சேவை அதிகார சபையினால் வைப்புச் செய்வது இதன் கருப்பொருளாகும். அதற்கிணங்க பயன்பெறும் மாணவர்கள் கா.போ. சாதாரண தரம் மற்றும் உயர் தர வகுப்பினை தொடங்கும் போது

அவர்களுக்கு மாதாந்தம் குறைந்த வகையில் ரூபா. 500/- இனைப் பெற்றுக்கொள்ளும் இயலுமை காணப்படும் வகையில் இவ்வாரம்ப வைப்பு உள்ளடக்கப்பட்டுள்ளது.

இத்தொகையானது அம்மாணவர்கள் கல்வி கற்கும் வகுப்பிற்கு ஏற்ப கா.போ. சாதாரண தர வகுப்பில் ரூபா. 12000/- சேமிப்புக் கணக்காக கிடைக்கும் வகையில் பணம் வைப்புச்செய்யப்படுகின்றது. அவ்வாறாயின் 6 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு மாதம் ஒன்றிற்கு 250/- ரூபா வீதம் 4 வருடங்களிற்கும், 7 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு மாதம் ஒன்றிற்கு 333.33 ரூபா என்ற வீதத்தில் 3 வருடங்களிற்கும், 8 ஆம் தரத்தினில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு மாதம் ஒன்றிற்கு 500/- ரூபா வீதத்தில் 2 வருடங்களிற்கும், 9 ஆம் தரத்தில் கல்வி கற்கும் மாணவன் ஒருவனுக்கு மாதம் ஒன்றிற்கு 1000/- ரூபா வீதத்திலும் ஒரு வருடத்திற்கு வைப்பிலிடப்படும்.

அச்சேமிப்புக் கணக்கில் தனிப்பட்ட வகையில் பங்களிப்புச் செய்வதற்கு கணக்கு உரிமையாளருக்கு இயலுமை உள்ளபடியினால் சேமிப்பு முறைமைக்கு அவர்களை பழக்கப்படுத்துவதும் இதனூடாக எதிர்பார்க்கப்படுகின்றது.

ரணவிரு சேவை அதிகார சபை கல்விசார் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் தற்போது கா.போ. சாதாரண தரம் மற்றும உயர் தரங்களில் கல்வி கற்கும் மாணவர்களுக்காக மாதாந்தம் 500/- ரூபாயினை வழங்குவதன் மூலம் அவர்களின் கல்வி நடவடிக்கையில் ஏற்படும் மேலதிக செலவீனங்களை ஏற்பதற்கு ஏதோவொரு வகையில் பங்களிப்புச் செய்கின்றது. அப்பணத் தொகையானது வழங்கப்படுவது அம்மாணவர்களின் கல்வி நடவடிக்கைக்காக மட்டுமேயன்றி குடும்பத்தின் வருமானத்தினை அதிகரிப்பதற்காகவன்று.

அதிகமான இராணுவத்தினரின் பிள்ளைகள் தற்போது மிகவும் இளம் வயதினராக இருப்பதுடன் அவர்கள் மேல் வகுப்புக்களுக்களை அடையும் போது இராணுவத்தினர் 12 வருடங்கள் அல்லது 22 வருடங்களினைப் பூர்த்தி செய்து சேவையில் இருந்து முடிவுறுத்தப்படும் சந்தர்ப்பத்துடன் ஒத்துப்போகின்றது. மேலும் இராணுவ வீரர் சேவையிலிருந்து முடிவுறுத்தப்படும் போது அக்குடும்பத்திற்கு கிடைக்கப்பெற்ற வருமானங்கள் குறைவடைகின்றது. என்றாலும் இந்நிகழ்வு நடைபெறுவது மாணவனின் கல்விக்காக பணம் அதிகமாக அவசியப்படும் காலத்திலேயாகும்.

இவ்விடயங்களை கவனத்திற்கொண்டு மேற்கூறப்பட்ட நெருக்கடிகளுக்கு முகங் கொடுக்க முன்னமே ஆயத்தமாகுவதற்கு குறித்த மாணவர்களை இலக்காகக் கொண்டு யாதேனும் ஒரு முதலீட்டினை செய்வது அத்தியவசியமாகும். இதன் தொடக்கமாக இராணுவத்தினரின் பிள்ளைகளின் அதி திறமைகளைக் கொண்டவர்களை நோக்காகக் கொண்டு, அவ்வாறான முதலீட்டு முறைமையினை ஆரம்பிப்பதற்கு சேமிப்புத் துறையின் முன்னோடி அரசாங்க நிறுவனமான தேசிய சேமிப்பு வங்கியுடன் இணைந்து இந்நிகழ்ச்சித் திட்டம் மேற்கொள்ளப்படுகின்றது.

## இலக்கு

செயற்பாட்டுச் சேவைகளில் ஈடுபட்டிருக்கும் போது தன்னுயிரைத் தியாகம் செய்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் தற்போது சேவையில் கடமையாற்றிக்

கொண்டிருக்கும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகள் உயர் கல்வி வரை வெற்றிகரமாக நிறைவேற்றிக் கொள்வதற்கு உற்சாகமூட்டுவதாகும்.

## இலக்குக் குழு

- உயிர்நீத்த, காணாமற் சென்ற மற்றும் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் தரம் 6 அல்லது அதனிலும் மேல் வகுப்பில் கல்வி பயிலும் மாணவர்கள்.
- சேவையில் ஈடுபட்டிருக்கும் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கானது 5 ஆம் தர புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியெய்தியிருத்தல் வேண்டும் என்பதோடு இராணுவத்தினரின் சேவைக் காலம் 12 வருடங்களை தாண்டியிருத்தல் வேண்டும். அவ்வாறே சேவைத்தளத்தின் தலைவரிடமிருந்து சேவையினை சான்றுப்படுத்தும் கடிதத்துடன் விண்ணப்பப்படிவத்தினை நலன்புரி பணிப்பாளர் மூலமாக ரணவிரு சேவை அதிகார சபையிடம் சமர்ப்பிக்க வேண்டும்.

யுத்தத்தில் உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவ வீரரின் பிள்ளையாயின் அப்பிள்ளையின் தாய் / தந்தை ரணவிரு சேவை அதிகார சபையின் மூலம் குறித்த பிரதேச செயலகப் பிரதேசத்தில் காணப்படும் ரணவிரு சங்சதவினில் அங்கத்துவம் பெற்றிருத்தல் அவசியமாகும்.

விண்ணப்பங்கள் சங்சத அங்கத்துவத்தின் மூலமாகப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதோடு அவ்விண்ணப்பத்தினை பூர்த்தி செய்து ரணவிரு சேவை அதிகார சபையின் அவ்வந்த மாகாணங்களிற்கு இணைக்கப்பட்டுள்ள மாகாண அலுவலரிடம் ஒப்படைத்து அவர்களின் பரிந்துரையினைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
சேவையில் கடமையாற்றும் போது ஏனைய காரணங்களினால் இறந்த இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கு குறித்த நலன்புரி பணிப்பாளரின் பரிந்துரைக்கு இணங்க உள்வாங்கப்பட முடியும்.

**திட்டத்திற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகையின் அளவிற்கு ஏற்ப சேவையில் கடமையாற்றுபவர்களுக்காக ஒரு வருடத்திற்கு குறித்த அளவிலானவர்களுக்கு இப்புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.**

இதுவரை இம்முறையின் கீழ் வழங்கப்பட்டிருக்கும் புலமைப்பரிசில்கள் எண்ணிக்கை 8000 ஆகக் காணப்படுவதோடு தற்போது 6000 எண்ணிக்கையுடைய புலமைப்பரிசில்கள் அமுலில் இருந்து வருகின்றன.

### விண்ணப்பிக்கும் முறை

சங்சத அங்கத்தவர்கள் :- உயிர் துறந்த, காணாமற் சென்ற மற்றும் அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் பிள்ளைகள் கட்டாயமாக சங்சத அங்கத்துவத்தினைப் பெற்றிருக்க வேண்டும் என்பதோடு குறித்த சங்சதயவின் மூலம் விண்ணப்பிக்கவும் முடியும்.

### தெரிவு முறைமை

- உயிர்துறந்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் 6 ஆம் தரத்திற்கு மேல் கல்வி கற்கும் சகல மாணவர்களும்
- தற்போது சேவையில் கடமையாற்றுபவர்களின் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய மாணவர்கள்

### வருடாந்த மேம்பாட்டு அறிக்கை

| | |
|---|---|
| 2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு | : 400 |
| 2013 வருடத்தின் மேம்பாடு | : 426 |

### 4.3.3. கல்விசார் புலமைப்பரிசில் ( கா. போ. சாதாரண தரம் மற்றும் உயர் தரம்)

இராணுவம், கடற் படை, விமானப்படை மற்றும் பொலிஸில் இருந்து செயற்பாடுகளின் போது உயிர் நீத்த, காணாமற் சென்ற மற்றும் அங்கவீனமுற்றவர்கள், சேவையில் கடமையாற்றும் இராணுவத்தினரின் கா. போ. சாதாரண தரம் / உயர் தரத்தில் கல்வி பயிலும் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளை ஊக்குவிக்கும் வகையில் மாதத்திற்கு ரூபா. 500/- வினை மக்கள் வங்கியினூடாக அவர்களின் வங்கிக் கணக்கிற்கு அனுப்பப்படும். இது அம்மாணவர்கள் கல்வி கற்கும் தரத்திற்கு இணங்க ஒரு வருடத்திற்கோ அல்லது இரண்டு வருடங்களிற்கோ வழங்கப்படும்.

### இலக்கு

செயற்பாட்டுச் சேவையில் ஈடுபட்டிருக்கும் போது உயிர் துறந்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறுகின்ற மற்றும் தற்போது சேவையில் கட மையாற்றுகின்ற இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கை உயர் கல்வி வரை வெற்றிகரமாக நிறைவேற்றுவதற்கு ஊக்கப்படு

### இலக்குக் குழு

01. யுத்தத்தில் உயிர்நீத்த, காணாமற் சென்ற, அங்கவீனமுற்று ஓய்வு பெறும் இராணுவத்தினரின் கா.போ. சாதாரண தர வகுப்பில் அல்லது உயர் தர வகுப்பில் கல்வி கற்கும் பிள்ளைகள்.
02. தற்போது சேவையில் கடமையாற்றும் இராணுவத்தினரின் 5 ஆம் தர புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய பிள்ளைகள்.
03. சேவையில் கடமையாற்றும் போது ஏனைய காரணங்களினால் இறந்த இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான நலன்புரி பணிப்பாளரின் பரிந்துரையின் பிரகாரம் இத்திட்டத்தினுள் உள்வாங்கப்படுவர்.

விண்ணப்பங்கள் சங்சத அங்கத்துவத்தின் மூலம் பெற்றுக் கொள்ளப்படல் வேண்டும் என்பதோடு அவ்விண்ணப்பப்படிவத்தினை பூர்த்தி செய்து ரணவிரு சேவை அதிகார சபையின் அவ்வந்த பிரதேசங்களுக்கு நியமிக்கப்பட்டுள்ள மாகாண அலுவலரிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

சேவையில் கடமையாற்றும் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான இராணுவ வீரரின் சேவைத்தளத்தின் தலைவரிடமிருந்து சேவையினை சான்றுப்படுத்திய கடித்துடன் அனுப்புதல் வேண்டும் என்பதோடு விண்ணப்பப்படிவத்தினை நலன்புரி பணிப்பாளர் ஊடாக ரணவிரு சேவை அதிகார சபையிடம் ஒப்படைத்தல் வேண்டும்.

இம்முறைமையின் கீழ் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்காக இதுவரையில் 4000 புலமைப்பரிசில்கள் பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ளது.

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு : 160

2013 வருடத்தின் மேம்பாடு : 196

### 4.3.3. உயர் கல்விக்கான புலமைப்பரிசில் திட்டம்

பல்கலைக்கழகம், கல்விக் கல்லூரிகள் மற்றும ஏனைய உயர் கல்வியினை மேற்கொள்ளும் நிறுவனங்களுக்கு தெரிவு செய்யப்படும் செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்ற, ஓய்வு பெற்ற, சேவையில் கடமையாற்றும் அங்கவீனர்கள், உயிர்நீத்த மற்றும் காணாமற் சென்ற இராணுவத்தினரின் பிள்ளைகளுக்காக மாதம் ஒன்றிற்கு 2000 ரூபா. விகிதம் புலமைப்பரிசில் வழங்கப்படுகின்றது.

**இலக்கு**

இராணுவத்தினரின் பிள்ளைகளின் உயர் கல்வி நடவடிக்கையினை மேற்கொள்ள உதவிசெய்தல்.

**இலக்குக் குழு**

- செயற்பாடுகளின் போது அங்கவீனமுற்றவர்கள், ஓய்வு பெறுபவர்கள், உயிர் நீத்த மற்றும் காணாமற் சென்ற இராணுவத்தினரின் பிள்ளைகளுக்காக.

**வருடாந்த மேம்பாட்டு அறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :25

2013 வருடத்தின் மேம்பாடு : 31

### 4.4. பெற்றோர் பாதுகாவலர் திட்டம்

தேசத்தின் ஒற்றுமையினைப் பாதுகாக்கும் வகையில் முப்படைகள் மற்றும் பொலிஸ் சேவையில் கடமையாற்றும் போது உயிர்நீத்த, காணாமற் சென்றவர்களைப் போன்றே அங்கவீனமுற்றவர்களாக இருக்கும் இராணுவத்தினர்கள் மற்றும் அக்குடும்ப அங்கத்தவர்களின் மனப்பாங்கு மற்றும் சமூக ரீதியாக வலுவூட்டி அபிமானத்துடனான தொலைநோக்கினைக் கொண்ட சமூகமாக கட்டியெழுப்பும் நோக்குடன் பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கும் இராணுவத்தினரின் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைளுக்காக நன்கொடைத் தொகை தேசிய மற்றும் சர்வதேச நன்கொடையாளர்களின் அனுசரணையின் கீழ் வழங்கப்படுகின்றது.

இங்கு ரணவிரு சேவை அதிகார சபையினால் அனுசரணையாளர் ஒருவர் கிடைக்கும் வரை மாதம் ஒன்றிற்கு 500 ரூபாவினை நன்கொடையாக பிள்ளைகளுக்கு பெற்றுக்கொடுக்கப்படுவதோடு அப்பிள்ளைகளுக்காக முடியுமான அளவு அனுசரணையாளர்கள் தேடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அங்கு அவ்வனுசரணையாளரின் கருத்துப்படி ஒரு பிள்ளைக்கு மாதம் ஒன்றிற்கு ரூபா. 1000/- அல்லது அதற்கு மேலதிகமாக வழங்கப்படல் வேண்டுமென்பதாகும். பிள்ளைகள் உயர் தரப் பரீட்சைக்காக இரு முறை தோற்றுவார்களாயின் அக்காலத்துக்குரிய நன்கொடைத் தொகை வழங்கப்படுவதோடு அதன் பின்னர் நன்கொடைத் தொகை வழங்கப்படுவது இடைநிறுத்தப்படும்.

## இலக்கு

01. குறை வருமானம் பெறும் இராணுவக் குடும்பங்களில் கல்வி கற்கும் வயதினையுடைய பிள்ளைகளுக்காக அவர்களின் கல்வி நடவடிக்கை உயர் கல்வி வரை வெற்றிகரமாக நிறைவு செய்வதற்கு உதவுதல்.
02. இராணுவத்தினரின் நலன்புரிக்காக உதவிசெய்யும் தேசிய மற்றும் சர்வதேச அனுசரணையாளர்களின் நன்கொடைகள் இராணுவக் குடும்பங்களுக்கு பெற்றுக்கொடுத்தல்.
03. சேவையில் கடமையாற்றும் இராணுவ வீரர், அங்கவீனமுற்ற, உயுரிழந்த அல்லது காணாமற் சென்ற இராணுவக் குடும்பங்களில் உள்ள அங்கவீனமுற்ற அல்லது நோய்வாய்ப்பட்டுக் கிடக்கும் இராணுவத்தினரின் பிள்ளைகளுக்கான நன்கொடையாளர்களின் அனுசரணையின் கீழ் நன்கொடைத் தொகை பெற்றுக்கொடுத்தல்.

## இலக்குக் குழு

01. செயற்பாடுகள் அல்லாத வேறு காரணங்களினால் இறந்த அல்லது அங்கவீனமுற்ற குறை வருமானம் பெறும் இராணுவக் குடும்மபங்களில் கல்வி கற்கும் பிள்ளைகள்

02. பூரணமாக அங்கவீனமுற்ற நிலையில் காணப்படும் இராணுவத்தினரின் கல்வி பயிலும் வயதினையுடைய பிள்ளைகள்

03. தற்போது சேவையில் கடமையாற்றும், இறந்த, அங்கவீனமுற்ற அல்லது காணாமற் சென்ற இராணுவத்தினரின் அங்கவீனமுற்ற அல்லது நோய்வாய்ப்பட்டுக் காணப்படும் இராணுத்தினரின் பிள்ளைகள்.

**கருத்திட்ட மேம்பாட்டு அறிக்கையின் சுருக்கம்**

| தொடரிலக்கம் | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த கருத்திட்ட மேம்பாடு |
|---|---|---|
| 01 | அதிகார சபையின் பணத்தில் இருந்து வழங்கப்படும் புலமைப்பரிசில் | 5988 |
| 02 | அதிகார சபையின் பணத்தில் இருந்து புதித்தாக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் | 83 |
| 03 | நன்கொடையாளர்களின் மூலம் வழங்கப்படும் புலமைப்பரிசில் | 1946 |
| 04 | நன்கொடையாளர்களின் நன்கொடையின் மீது புதிதாக ஆரம்பிக்கப்பட்ட புலமைப்பரிசில் | 09 |

## 4.5. வீடமைப்பு நிதியுதவி கருத்திட்டம்

இலங்கையின் இறையாண்மையினைக் காக்கும் வகையில் செயற்பாடுகளில் தங்களது உன்னத உயிர்களைத் துறந்த அத்தோடு காணாமற் சென்ற இராணுவத்தினரின் குடும்பங்கள் மற்றும் செயற்பாடுகளில் அர்ப்பணத்தோடு கடமையாற்றி அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் அங்கவீனமுற்று சேவையில் கடமையாற்றும் மற்றும் தற்போது சேவையில் கடமையாற்றும் முப்படைகள் மற்றும் பொலிஸ் அலுவலர்கள் எதிர்நோக்கும் பிரதான பிரச்சினையாக வீட்டுத் தேவையினை நிவர்த்தி செய்து அவ்விராணுவத்தினர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்கள் சமூக ரீதியாக மற்றும் மனப்பாங்கு ரீதியாகவும் பலப்படுத்துவது இதன் மூலம் இடம்பெறுகின்றது.

### இலக்கு

01. செயற்பாடுகளின் போது உயிர்நீத்த, காணாமற் சென்ற காணியொன்றின் உரிமையாளராக உள்ள இராணுவ வீர்ரின் குடும்பத்தில் கிட்டிய உறவினர்களுக்கு ஓய்வு பெற்ற, அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்கு மற்றும் சேவையில் கடமையாற்றும் அங்கவீனமுற்ற இராணுவத்தினருக்காக வீடு கட்டுவதற்கான நிதியுதவியினைப் பெற்றுக்கொடுத்தல்.

02. வீடுகளைப் புனரமைத்தல் / வீட்டின் பழுதுகளை திருத்தியமைத்தல் மற்றும் வீடுகளில் நவீன பாகங்களை பொருத்துவதற்கு நிதியுதவியினைப் பெற்றுக்கொடுத்தல்.

03. இயற்கை அனர்த்தங்களினால் உடைந்து போன வீடுகளை கட்டுவதற்காக உதவிசெய்தல்.

04. குறைந்த செலவில் வீடுகளை நிர்மானிப்பதற்காக அவசியப்படும் தொழிநுட்ப வழிகாட்டல்கள் மற்றும் ஆலேசனைகளைப் போன்றே வீட்டினைக் நிர்மானித்த்தன் பின்னர் அதனை ஒழுங்கு முறையாக மற்றும் அழகாக வைத்துக் கொள்வதற்குரிய ஆலோசனைகள் வழங்கல்.

### இலக்குக் குழு

01 செயற்பாடுகளின் போது உயிர்களை அர்ப்பணம் செய்த காணாமற் சென்ற இராணுவத்தினரின் கிட்டிய உறவினர்களுனகாக

02 அங்கவீனமுற்று ஓய்வு பெறும் மற்றும் அங்கவீமுற்று சேவையில் கடமையாற்றும்

03 சேவையில் கடமையாற்றும் அங்கவீனமுற்ற இராணுவ்தினர்கள்

04 செயற்பாடுகள் தவிர்ந்த ஏனைய சந்தர்ப்பங்களில் இறந்த பாதுகாப்புச் சேவையில் கடமையாற்றிய உறுப்பினர்களின் கிட்டிண குடும்ப அங்கத்தவர்கள்

### வருடாந்த மேம்பாட்டு அறிக்கை

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு :

2013 வருடத்தின் மேம்பாடு: பதிய வீடுகள் தவணை99, இரண்டாம் தவணை 147

## 4.6. பெற்றோர் பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம்

தேசத்தின் பாதுகாப்பினை காப்பாற்றும் வகையில் தன்னுயிர்களை தியாகம் செய்த மற்றும செயற்பாடுகளின் போது காணாமற் சென்ற வீரோதார இராணுவத்தினரின் சில பெற்றோர்கள் பொருளாதார மற்றும் மனோநிலை ரீதியாக பாதிக்கப்பட்டுள்ளார்கள். அவர்களின் மத்திய வயதில் பொருளாதார மற்றும் மனோநிலை ரீதியாக திருப்தியோடு வாழ்க்கையினை கழிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்படும் நலன்புரித் திட்டமாகும்.

### இலக்கு

- பல்வேறுபட்ட நெருக்கடிகளுக்கு மத்தியில் ஆதரவற்ற நிலையில் காணப்படும் இராணுவத்தினரின் பெற்றோர்களை இனங்காணல்
- இராணுவத்தினரின் பெற்றோர்களின் தேவைகளை நிறைவேற்ற இயன்ற அளவில் நிதியுதவியினைப் பெற்றுக்கொடுத்தல்'
- இராணுவத்தினரின் பெயர்ளுக்கு நன்றி செலுத்தும் முகமாக ஏனைய இராணுவக் குடும்ப அங்கத்தவர்களின் மற்றும் மனித நேயமுள்ளவர்களின் உதவியுடன் ஆதரவற்ற பெற்றோர்களின் மனநல ரீதியாக உதவுதல்.

### இலக்குக் குழு

செயற்பாட்டுச் சேவையின் போது உயிர்நீத்த திருமணமான இராணுவ வீர்ரொருவரின்

- அரசங்கத்தினால் ஓய்வூதியம் பெறாத இராணுவத்தினரின் பெற்றோர்கள்
- உயிர்களை அர்ப்பணம் செய்த அல்லது காணாமற் சென்ற தங்களது பிள்ளைகள் திருமணமாயின் அதற்காக கிடைக்கப்பெறும் நன்மைகளில் எதுவும் பொருளாதார ரீதியாக சலுகைகள் கிடைக்காத பெற்றோர்கள்.
- இராணுவத்தினர் தவிர்ந்த அரசாங்க தொழில் புரியாத ஏனைய பிள்ளைகள் இருந்தும் பராமரிக்க முடியாத பெற்றோர்கள்.

**வருடாந்த மேம்பாட்டுஅறிக்கை**

2013 வருடத்தின் இலக்கிற்குரிய அளவு -

2013 வருடத்தின் மேம்பாடு - புதிய 74, பழைய 1363

# 05

# தரவு மற்றும் தகவல் பிரிவு

5.1. தரவு முறைமை

5.2. பெயர்ப்பட்டியல் வர்த்தமானியில் பிரசுரித்தல்

5.3. அடையாள அட்டை தயாரித்தல்

5.4. மா-பிய பாதுகாப்பு கணக்குப் புத்தகங்களை வழங்கல்

### 5.1. தரவு முறைமை தயாரித்தல்

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த, காணாமற்போன மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த முப்படையிலும், பொலிஸ்சேவையிலும் பணியாற்றிய இராணுவ வீரர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் தங்கி வாழ்கின்றவர்கள் உள்ளடங்கிய தரவு முறைமையொன்று தயாரிக்கப்படுகின்றது

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த, காணாமற்போன மற்றும் அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த முப்படையிலும், பொலிஸ் சேவையிலும் பணியாற்றிய இராணுவ வீரர்கள் இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களின் தங்கி வாழ்கின்றவர்கள் உள்ளடங்கிய தரவு முறைமையைப் பேணல்

**இலக்கு**

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள்
- காணாமற்போன இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள்
- அங்கவீனமுற்று ஓய்வுபெற செய்த இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்கள்

### 5.2. பெயர்ப்பட்டியல் வர்த்தானியில பிரசுரித்தல்

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் குடும்ப அங்கத்தவர்களுக்கு 2010 ஜூன் மாதம் 08 ஆந் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் 'உத்தம பூஜா பிரணாம பதக்கம' உரித்துடையவராக வர்தமானியின் மூலம் அதிமேதகு சனாதிபதி அவர்களினால் வெளியிடப்பட்டமை.

**இலக்கு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் உறவினர்களுக்கு சாதாரண சமுகத்தில் கௌரவமான நிலையொன்றை சட்டரீதியாக வழங்குதல்

சாதாரண சமூகத்தில் இராணுவ வீர்ர்களின் உறவினர்களை விசேட அடையாளம் மூலம் இனங்காண ஏற்பாடு செய்தல்

**இலக்குக் குழு**

செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் தாய், தந்தை, மனைவி மற்றும் பிள்ளைகள்

### 5.3. அடையாள அட்டை தயாரித்தல்

செயற்பாட்டு நடவடிக்கையின் போது பயங்கரவாத தாக்குதல் காரணமாக மரணமடைந்த, காயம்பட்ட, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெறச்செய்த முப்படை மற்றும்

பொலிஸ் சேவையின் வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு சமுக ரீதியான அலுவல்களின் போது முன்னுரிமையளிப்பது தொடர்பான நற்பணியொன்றாகும்.

### இலக்கு

முப்படை மற்றும் பொலிஸ் சேவையின் வீரர்களின் நெருங்கிய உறவினர்களுக்கு சமுக ரீதியான அலுவல்களின் போது முன்னுரிமையளிப்பதற்காக

### இலக்குக் குழு

1. செயற்பாட்டு நடவடிக்கையின் போது தாய் நாட்டிற்காக உயிர்நீத்த இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்
2. செயற்பாட்டு நடவடிக்கையின் போது அங்கவீனமுற்ற இராணுவ வீரர்களின் நெருங்கிய உறவினர்கள்

## 5.4. 'மா பிய' பாதுகாப்பு கணக்குப் புத்தகங்கள் வழங்கல்

ரணவிரு சேவா அதிகார சபையின் மூலம் வழங்கப்படும் ரூபா 750.00 படி, செயற்பாட்டு நடவடிக்கையின் போது பயங்கரவாத தாக்குதல் காரணமாக மரணமடைந்த, காயம்பட்ட, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெறச்செய்த இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு மாத்திரம் வழங்கப்படுகின்ற மாதாந்தக் கொடுப்பனவாகும்.

### இலக்கு

செயற்பாட்டு நடவடிக்கையின் போது பயங்கரவாத தாக்குதல் காரணமாக மரணமடைந்த, காயம்பட்ட, மருத்துவக் காரணங்களின் அடிப்படையில் ஓய்வு பெறச்செய்த இராணுவ வீரர்களின் பெற்றோர்களுக்கு நிதிசார் ஊக்குவிப்புப் படி தொடர்பாக

### இலக்குக் குழு

- செயற்பாட்டு நடவடிக்கையின் போது உயிர்நீத்த இராணுவ வீரர்களின் பெற்றோர்
- காணாமற்போன இராணுவ வீரர்களின் பெற்றோர்
- அங்கவீனமுற்று ஓய்வுபெற்ற இராணுவ வீரர்களின் பெற்றோர்

### வருடாந்த மேம்பாடு - பொழிப்பு

| தொ.இல. | நிகழ்ச்சித் திட்டம் | வருடாந்த செயற்திட்ட மேம்பாடு |
|---|---|---|
| 01 | அடையாள அட்டைகளைத் தயாரித்தல் | 945 |
| 02 | மா பிய பாதுகாப்பு கணக்குப் புத்தகங்களை வழங்கல் | 21178 |

## முடிவுரை

CHECKED / RETURNED
Signature P.M.A. Senanu

විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
Auditor General's Department
AGDSL

டீசீ/டீ/ஆர்எஸ்ஏ/1/13/02 2015 யூலை 9

தலைவர்,
ரணவிரு சேவா அதிகாரசபை.

**ரணவிரு சேவா அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை.**

---

ரணவிரு சேவா அதிகாரசபையின் 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களையும் உள்ளடக்கிய 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) பிரிவு மற்றும் 1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 9(3) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையில் உள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் ஆண்டறிக்கையுடன் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இவ்வறிக்கையில் காணப்படுகின்றன. நிதி அதிகாரச்சட்டத்தின் 13(7)(ஏ) பிரிவின் பிரகாரம் விரிவான அறிக்கையொன்று அதிகாரசபையின் தலைவருக்கு 2014 திசெம்பர் 08 ஆம் திகதி வழங்கப்பட்டது.

## 1.2 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் அவசியமான உள்ளகக் கட்டுப்பாடுகளைத் தீர்மானித்தல் முகாமையின் பொறுப்பாக உள்ளது.

CHECKED
RE Division

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

உயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச கணக்காய்வு நியமங்களுக்கு (ISSAI 1000-1810) அமைய இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க மேற்கொள்ளப்பட்ட கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும்.

## 1.4 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் விளைவாக நிதி நிலைமைக்கூற்று, நிதிச் செயலாற்றல் கூற்று, தேறிய சொத்துக்கள் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று என்பவற்றில் அறிக்கையிடப்பட்ட அல்லது அறிக்கையிடப்படாத விடயங்கள் தோற்றுவிக்கும் மூலாதாரங்கள் தொடர்பாகவும் ஏதும் செம்மையாக்கல்கள் அவசியமானவையாகக் காணப்படுமா என்பதனை தீர்மானிக்க என்னால் முடியாதுள்ளேன்.

## 2 நிதிக்கூற்றுக்கள்

### 2.1 மறுப்பு அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட முக்கியமான விடயங்களின் காரணமாக கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளேன். அதற்கிணங்க இந்நிதிக்கூற்றுக்கள் மீது நான் அபிப்பிராயம் ஒன்றினைத் தெரிவிக்கவில்லை.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 09 இன் பிரகாரம் சொத்தொன்று பயன்படுத்துவதற்காக தகைமை பெற்ற சந்தர்ப்பத்திலிருந்து பெறுமானத்தேய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், கொள்வனவு செய்யப்பட்ட ஆண்டில் சொத்துக்கள் பெறுமானத்தேய்வு செய்யப்படமாட்டாது என்ற கொள்கையைப் பின்பற்றுவதனால் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 7,175,777 தொகையான சொத்துக்கள் தொடர்பில் பெறுமானத்தேய்வு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.2 **கணக்கீட்டுக் கொள்கை**

அதிகாரசபைக்கு கிடைக்கப்பெறும் நன்கொடைகள் தொடர்பாக பின்பற்றப்படுகின்ற கணக்கீட்டுக் கொள்கை வெளிப்படுத்தப்படாதிருந்ததுடன், மீளாய்வாண்டில் அதிகாரசபைக்கு நன்கொடைகளாக கிடைக்கப்பெற்ற ரூபா 462,760 பெறுமதியான கணனி மற்றும் உப பாகங்கள் கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

2.2.3 **கணக்காய்விற்கான சான்றுகளின்மை**

மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு அறவிடப்பட வேண்டியிருந்த ரூபா 213,585,238 ஆன கடன் தொகையை உறுதிப்படுத்துவதற்காக குறித்த தனியாள் கணக்குகளை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட பட்டோலையொன்று சமர்ப்பிக்கப்படாதிருந்தமையால் அதன் சரியான தன்மையை உறுதிப்படுத்த முடியாதிருந்தது.

2.3 **சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள், முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மை தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்களிற்கான தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|---|
| (அ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 8(1) ஆம் பிரிவு | மீளாய்வாண்டின் பாதீடு 2012 செப்தம்பர் 30 ஆம் திகதிக்கு முன்னர் ஆளுகைச் சபையினால் அங்கீகரிக்கப்பட வேண்டிய போதிலும், அது 2013 பெப்ரவரி 22 ஆந் திகதியன்றே அங்கீகரிக்கப்பட்டிருந்தது. |
| (ஆ) | 1990 ஒக்தோபர் 10 ஆந் திகதிய 41/90 ஆம் இலக்க பொது நிர்வாகச் சுற்றறிக்கை | அதிகாரசபைக்கு சொந்தமான வாகனங்கள் தொடர்பாக 06 மாதங்களுக்கு ஒரு முறை எரிபொருள் நுகர்வு அளவு தொடர்பில் பரிசோதனை மேற்கொள்ளப்பட வேண்டிய போதிலும், நிறுவகத்தின் ஆரம்பம் முதல் இதுவரை பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. |

CHECKED
RE Division

(இ) 2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கை

(i) 5.2.1 ஆம் பிரிவு — மீளாய்வாண்டிற்காகத் தயாரிக்கப்பட்டிருந்த பாதீட்டில் பாதிடப்பட்ட வருமானச் செலவினக் கூற்று, ஐந்தொகை, பாதிடப்பட்ட காசுப் பாய்ச்சல் கூற்று மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம் என்பன உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ii) 6.5.1 ஆம் பிரிவு — நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு ஆண்டறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்கம் மற்றும் 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐஏஜ/2002/02 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றறிக்கைகள் மற்றும் 2009 செப்தெம்பர் 01 ஆந் திகதிய டீஎம்ஏ/02 ஆம் இலக்க முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களச் சுற்றறிக்கை — அதிகாரசபையால் நிலையான சொத்துக்கள் பதிவேடு மற்றும் கணனி துணைப் பாகங்களின் பதிவேடு என்பன பேணப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2013 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான அதிகாரசபையின் நிதி விளைவு ரூபா 12,301,556 ஆன பற்றாக்குறையாக இருந்ததுடன், அதற்கு எதிராக முன்னைய ஆண்டின் நிதி விளைவுகள் ரூபா 2,294,685 ஆன மிகையாக இருந்தது. இதன் படி, மீளாய்வாண்டிற்கான நிதி விளைவுகளில் ரூபா 14,596,241 தொகையான வீழ்ச்சி அவதானிக்கப்பட்டது. இவ்வீழ்ச்சிக்காக மீளாய்வாண்டின் மீண்டுவரும் மானியம், சேவைகள் கட்டணம் மற்றும் ரணவிரு கொடி விற்பனை வருமானம் ரூபா 35,586,678 ஆல் அதிகரித்தமை மற்றும் லொத்தர் வருமானம், வட்டி வருமானம் மற்றும் நன்கொடைகள் என்பன ரூபா 19,757,140 ஆல்

குறைவடைந்தமையும், பராமரிப்புச் செலவினம், ஏனைய மீண்டுவரும் செலவினம், செயற்பாட்டுச் செலவினம் மற்றும் பெறுமானத்தேய்வு என்பன ரூபா 40,014,858 ஆல் அதிகரித்தமையும் ஒப்பந்த சேவைச் செலவினம் ரூபா 1,150,177 ஆல் குறைவடைந்தமை காரணங்களாக இருந்தன.

4. செயற்பாட்டு மீளாய்வு

4.1 செயலாற்றல்

(அ) தரவு முறைமை தாபித்தல் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டன.

1999 இன் 54 ஆம் இலக்க ரணவிரு சேவா அதிகாரசபை அதிகாரச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின் பிரகாரம் யுத்தத்தின் போது ஊனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களினதும் கண்டுபிடிக்க முடியாது போன அனைத்து இராணுவ வீரர்கள் மற்றும் அவர்களில் தங்கியிருப்போர் தொடர்பான தகவல்கள் உள்ளடக்கப்பட்ட பெயர்ப்பட்டியலொன்று அதிகாரசபை ஆரம்பிக்கப்பட்டு 60 நாட்களுக்குள் மேற்கொள்வதற்கும் அவ்வறிக்கையை நாளதுவரையாக்கப்பட்டு பராமரிப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டிருந்த போதிலும், அவ்வாறான அறிக்கையொன்று தயாரிக்கப்படாததன் காரணமாக 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ரூபா 6,230,691 தொகை செலவு செய்து தகவல் முறைமையொன்றை தயாரிப்பதற்காக நாடளாவிய ரீதியில் தகவல் சேகரிப்பதற்கான முறைமையொன்று ஆரம்பிக்கப்பட்டிருந்தது. எனினும் அதன் மூலம் பெற்றுக்கொண்ட தகவல்கள் 2014 திசெம்பர் 31 வரையிலும் முறைப்படி தகவல் முறைமையொன்றுக்கு உட்படுத்துவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

(ஆ) யுத்தகளத்தில் ஊனமுற்ற மற்றும் மரணித்த காணியற்ற இராணுவ வீரர்களின் குடும்பங்களிற்காக பொருத்தமான காணியொன்றை வழங்கும் நோக்கில் நடவடிக்கை எடுத்திருந்ததுடன், அது தொடர்பாக கணக்காய்வின் போது கண்டறியப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளன.

(i) 2001 ஆம் ஆண்டின் போது கிடைக்கப்பெற்ற 1.44 ஏக்கர் மினுவங்கொடை கிரலமெத காணி வயல் காணியாக இருந்தமையால் இராணுவ வீரர்களுக்கு பகிர்ந்தளிக்க முடியாமல் இருந்ததுடன், இதுவரையிலும் அது தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

CHECKED
RE Division

(ii) இராணுவ வீரர்களுக்கிடையே பகிர்ந்தளிப்பதற்கு பிரதேச செயலகங்களுடாக 2004 ஆம் ஆண்டிலிருந்து அதிகாரசபைக்கு கிடைத்திருந்த 75.82 ஏக்கர் அளவிலான 10 காணிகளை பகிர்ந்தளிப்பதற்காக இதுவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இக்காணிகளின் நிலைமை கீழே காட்டப்பட்டுள்ளன.

- 31.57 ஏக்கர் அளவிலான 02 காணிகள் (கொஜராகம மற்றும் சூரியபொகுன கொரகஹவெல காணி) வசிப்பதற்கு பொருத்தமற்றதாக குறிப்பிடப்பட்டிருந்ததுடன், அதற்குப் பதிலாக மாற்றுக் காணி வழங்குவதற்கு அதிகாரசபை தவறியிருந்தது.

- 44.25 ஏக்கர் அளவிலான எஞ்சிய 08 காணிகள் இராணுவ வீரர்களுக்கு பகிர்ந்தளிப்பதற்கு இதுவரை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஊனமுற்ற மற்றும் கொல்லப்பட்ட இராணுவ வீரர்களின் குடும்பங்களிலுள்ள உறுப்பினர்களுக்கு நிதி ரீதியான சலுகைகளை வழங்குவதற்காக அதிகாரசபை வீடமைப்புக் கடன், சுயதொழில் கடன், மருத்துவக் கடன் மற்றும் முச்சக்கர வண்டிக் கடன் என்ற ரீதியில் கடன் வழங்கல் மேற்கொள்ளப்பட்டிருந்தன. அதிகாரசபையால் 2004 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை 6481 கடன்களுக்காக ரூபா 1,060,212,885 தொகை வழங்கப்பட்டிருந்ததுடன், ஒவ்வொரு நலனாளிகளாலும் அதிகாரசபையிடமிருந்து இதுவரை பெற்றுக்கொண்ட நலன்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் முறைமையொன்றை தாபிப்பதற்கும் கடன் தொடர்பாக தனிப்பட்ட பேரேட்டு மீதிகள், கட்டுப்பாட்டுக் கணக்குகளுடன் ஒப்பிட்டு சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்கு 2013 ஆம் ஆண்டின் இறுதிவரையிலும் அதிகாரசபை தவறியிருந்தது.

(ஈ) இராணுவ வீரர்களின் பெயர்களை ஞாபகப்படுத்தும் மாதிரிக் கிராமங்களை தோற்றுவிப்பதற்காக அதிகாரசபையினால் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்கு 40 ரணவிரு கிராமங்கள் காணப்பட்டன. அதிகாரசபையினால் ரணவிரு கிராமங்களுக்காக உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி, கிராமங்களுக்காக உபகரணங்கள் மற்றும் பொருட்கள் வழங்குதல், பரஸ்பர மேம்பாட்டு நிகழ்ச்சித்திட்டங்கள், பொது வசதிகள் அபிவிருத்தி, வீட்டுத்தோட்ட நிகழ்ச்சித்திட்டங்கள், கல்விசார்ந்த மற்றும் சமூக நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்துவதற்கு நிதிஏற்பாடுகளைப் பெற்றுக்கொண்ட

CHECKED
RE Division

போதிலும், அவற்றை வினைத்திறனாக ஈடுபடுத்தல், கிராமம் தொடர்பாக ஆய்வுகளை மேற்கொண்டு தேவைப்பாடுகளை இனங்காணலும் வழங்கப்பட்ட வசதிகளின் பெறுபேற்றினை பரீட்சித்தல் போன்ற நடவடிக்கைகள் மிகவும் பலவீனமான மட்டத்தில் காணப்பட்டன.

4.2 முகாமைத்துவ செயற்திறனின்மை

---

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒவ்வொரு கிராமத்திலும் உள்ள ரணவிரு குடும்பங்களின் பெண்களை அக்கிராமத்தில் வழிநடாத்தும் பெண்களாக மாற்றும் நோக்கில் அவர்களது பொருளாதார, குடும்ப அபிவிருத்தி, சமுதாய அபிவிருத்தி மற்றும் சமூகசார்ந்த பிரிவுகளை வலுப்படுத்துவதற்காக 2013 மார்ச் மாதம் ரணவிரு பெண்கள் படைப்பிரிவொன்று உருவாக்கப்பட்டிருந்ததுடன், அதற்குரிய ஆரம்ப விழாவிற்காக ரூபா 2,545,709 தொகையும், ஊடகச் செலவினத்திற்காக ரூபா 1,002,401 தொகையும் அதிகாரசபையால் செலவிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் 2013 திசெம்பர் 18 ஆம் திகதி 100 பெண்களுக்காக ரூபா 140,000 தொகை செலவு செய்து செயலமர்வொன்று மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

(ஆ) 2009 ஆம் ஆண்டின் போது ரூபா 90 மில்லியன் செலவு செய்து கையேற்கப்பட்ட காணி மற்றும் கட்டிடத்திற்காக 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் திருத்தங்கள் மற்றும் மேம்படுத்தல் நடவடிக்கைகளுக்கு ரூபா 38,312,618 தொகை செலவிடப்பட்டிருந்தன. திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் வேளையில் 2012 நவம்பர் மாதத்திலிருந்து அக்கட்டிடத்தில் அலுவலக நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்ட போதிலும், அதன் மேல் மாடியில் நிர்மாணிப்பதற்குத் திட்டமிடப்பட்டிருந்த கேட்போர் கூடத்தை அமைப்பதற்கும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கு வருகை தரும் இராணுவ வீரர்களுக்கு இலகுவாக உரிய பிரிவுகளுக்கு செல்வதற்காக மின் பாரந்தூக்கியொன்றைப் பொருத்தும் நடவடிக்கைகள் 2015 ஏப்ரல் 30 ஆம் திகதி வரையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) மீளாய்வாண்டில் 12 சந்தர்ப்பங்களில் பெறப்பட்டிருந்த ரூபா 811,080 தொகையான முற்பணங்களில் செலவிடப்படாமல் சேமிக்கப்பட்டிருந்த ரூபா 185,664 தொகை நிகழ்ச்சித்திட்டங்கள் முடிவடைந்து 14 நாட்கள் முதல் 150 நாட்கள் வரையான காலதாமதத்திற்கு பின்னர் ஒப்படைக்கப்பட்டிருந்தது. செலவினத்திற்கு தேவையான பணத்தொகையை சரியாக மதிப்பீடு

CHECKED
RE Division

செய்யாமையால் பெற்றுக்கொண்ட முற்பணங்களுக்கு ஒப்பாக 12 சதவீதம் முதல் 40 சதவீதம் வரையான வீச்சில் முற்பணங்கள் செலவிடப்படாது சேமிக்கப்பட்டிருந்தமையும் முற்பணத்தை தீர்வு செய்யும் போது தாமதங்கள் காணப்பட்டமையும் அவதானிக்கப்பட்டன.

(ஈ) 2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 2,186,172 தொகையான தீர்க்கப்படாத முற்பணம் காணப்பட்டதுடன், அவற்றை பெற்றுக்கொண்ட திகதியிலிருந்து 07 நாட்கள் முதல் 231 நாட்கள் வரையான காலவீச்சில் தீர்வு செய்யப்படாது காணப்பட்டன. மேலும் 2013 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் அம்முற்பணங்களில் ரூபா 219,800 கூட்டுத்தொகையான 09 முற்பணங்களிற்காக தீர்வு செய்வதற்கான பட்டியல்களைச் சமர்ப்பிக்காமல் எஞ்சிய பணமாக ரூபா 29,894 தொகை அதிகாரசபைக்குச் செலுத்தப்பட்டிருந்தன.

(உ) 2011 ஆம் ஆண்டின் போது பாதுகாப்பு அமைச்சிடமிருந்து அதிகாரசபைக்கு வழங்கப்பட்டிருந்த PR-0612 ஆம் இலக்க வாகனம் தொடர்ச்சியாக பயன்படுத்தப்பட்டிருந்த போதிலும், உரித்தைப் பொறுப்பேற்கவோ அல்லது மீள ஒப்படைப்பதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.3 செயற்பாட்டு வினைத்திறனின்மை

2013 ஆகஸ்ட் 13 ஆம் திகதி வ/ப இலங்கை அரச வர்த்தக (நானாவித) கூட்டுத்தாபனத்திடமிருந்து ரணவிரு சேவை அதிகாரசபையின் கட்டிடத்தின் இரண்டாம் மாடிக்கு ரூபா 3,049,860 தொகையான வீட்டுத் தளபாடங்கள் கட்டளையிடப்பட்டிருந்தன. அதிகாரசபையால் அக்கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 609,972 ஆன முற்பணம் செலுத்தப்பட்டிருந்ததுடன், கட்டளையிடப்பட்ட பொருட்கள் 2013 ஒக்தோபர் 19 ஆம் திகதிக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்தது. அது தொடர்பாக பரீட்சித்த போது அவதானிக்கப்பட்ட விடயங்கள் கீழே காட்டப்பட்டுள்ளது.

(அ) 2013 ஒக்தோபர் 19 ஆந் திகதிக்கு முன்னர் வழங்கப்பட வேண்டிய பொருட்களில் 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் ரூபா 2,171,860 பெறுமதியான பொருட்கள் மாத்திரம் வழங்கப்பட்டிருந்தது. இங்கு கட்டளையில் குறிப்பிடப்பட்டிருந்த பொருட்களை விட மாற்றமான பொருட்கள் வழங்கப்பட்டிருந்ததுடன், கோரப்பட்ட அளவை விட கூடுதலாகவும் சில பொருட்கள் வழங்கப்பட்டிருந்தன.

(ஆ) 2014 திசெம்பர் 31 ஆம் திகதி வரையிலும் கட்டளையின் நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்படாமல் இருந்ததுடன், 2014 பெப்ரவரி 07 ஆம் திகதி தனியார் கம்பனியொன்றினால் ரூபா 2,183,280 ஆன பட்டியலொன்று சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் மேற்படி கூட்டுத்தாபனத்தினால் வேறொரு கம்பனிக்கு உப ஒப்பந்தம் வழங்கப்பட்டிருந்தமையும் அவதானிக்கப்பட்டது.

## 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) வேன் வண்டியொன்றும் மோட்டார் சைக்கிளொன்றும் இரண்டு ஆண்டுகளுக்கு மேலாக விளைவற்றதாக அலுவலக வளவில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது.

(ஆ) 2013 பெப்ரவரி 22 ஆம் திகதி ரூபா 210,000 தொகை செலவு செய்யப்பட்டு கைவிரலடையாள இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், அது சம்பளம் தயாரித்தல் மற்றும் ஏனைய நிர்வாக நடவடிக்கைகளுக்காக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4.5 பதவியணியினர் முகாமைத்துவம்

2013 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அதிகாரசபையின் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியனர் எண்ணிக்கை 44 ஆக இருந்ததுடன், உள்ளவாறான பதவியணியினர் எண்ணிக்கை 35 ஆக இருந்தது. அதன் பிரகாரம் வெற்றிடங்கள் 09 ஆக காணப்பட்டன. இது தொடர்பாக பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அதிகாரசபையின் பதவியணியினை மீளமைப்புச் செய்வதற்குரிய அங்கீகாரம் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2012 ஒக்தோபர் 16 ஆம் திகதி வழங்கப்பட்டிருந்ததுடன், 2013 யூலை 09 ஆம் திகதி சம்பளம் மற்றும் ஊழியர் ஆணைக்குழுவினால் ஆட்சேர்ப்பு நடைமுறையை அங்கீகரிப்பதற்கான பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. ஆட்சேர்ப்பு நடைமுறை 2013 ஆகஸ்ட் 19 ஆம் திகதி முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் 2013 ஒக்தோபர் 25 ஆம் திகதி பதவியணிக்கு ஆட்சேர்ப்பதற்கான பத்திரிகை அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்ததுடன், 2013 நவம்பர் 08 ஆம் திகதி விண்ணப்பங்களைப் பொறுப்பேற்றல் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. எவ்வாறாயினும் அதற்குரிய பதவியணிக்குரிய ஆட்சேர்ப்பு நடவடிக்கைகள் இதுவரை பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

RE Division

(ஆ) அதிகாரசபையின் பதவியணியின் நிர்வாக உத்தியோகத்தர், கணக்காளர் மற்றும் செயற்திட்ட முகாமையாளர் போன்ற பதவிகள் முறையே 2012 மார்ச் 15, 2012 மே 14 மற்றும் 2013 ஆகஸ்ட் 16 ஆம் திகதிகளில் வெற்றிடங்களாக காணப்பட்ட போதிலும் அவ்வெற்றிடங்கள் உட்பட மேற்படி 09 வெற்றிடங்களை நிரப்புவதற்காக அதிகாரசபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. அவ்வாறே கணக்குப் பிரிவின் நடவடிக்கைகள் நிதி உதவியாளராலும் மேலும் இரண்டு எழுதுவினைஞர்களாலும் மேற்கொள்ளப்பட்டு வருவதுடன், அங்கு வினைத்திறனான வேலைப் பகிர்வு இடம்பெற்றிருக்காமை அவதானிக்கப்பட்டது.

(இ) அதிகாரசபையின் மாகாண உத்தியோகத்தர்களை அதிகாரசபையின் நடவடிக்கைகளுடன் கூட்டிணைக்கும் வகையில் மாதாந்த திட்டமொன்று தயாரிக்கப்படாதிருந்ததுடன், அந்த உத்தியோகத்தர்களின் நடவடிக்கைகளுக்குரிய செயன்முன்னேற்ற மீளாய்வு முறைப்படி நிறைவேற்றபடாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 5. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 5.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2003 யூன் 02 ஆந் திகதிய பீஈடீ/12 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 60 நாட்களுக்குள் அவ்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய போதிலும், 2013 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக 2014 திசெம்பர் 29 ஆந் திகதியே சமர்ப்பிக்கப்பட்டிருந்தன.

### 5.2 பாதீட்டுக் கட்டுப்பாடு மற்றும் செயல்நடவடிக்கைத் திட்டம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) கூட்டிணைந்த திட்டத்தில் குறிப்பிடப்பட்டதன் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான இலக்குகளை அடைந்து கொள்வதற்காக பாதீட்டில் நிதி ஏற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும் என்பதுடன் அந் நிதியங்களை ஆண்டின் போது செயற்திறனாக பயன்படுத்துவதற்காக நிதி மற்றும் பௌதீக இலக்குகளின் பொறுப்புக்கள் நிர்ணயிக்கப்பட்டு செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு காலரீதியாக உள்ளபடியான மீதிகளுடன் ஒப்பிட்டு தேவையான திருத்தங்களுடன் உரிய இலக்கு நோக்கி செயற்படுதல் வேண்டுமாயினும்,

CHECKED
RE Division

மீளாய்வாண்டின் போது அவ்வாறான வழிகாட்டலொன்று அதிகாரசபையில் செயற்படுத்தப்பட்டிருக்கவில்லை.

(ஆ) செயல்நடவடிக்கைத் திட்டத்தின் பிரகாரம் செயற்பாடுகள் நிறைவேற்றப்படாமையால் மீளாய்வாண்டில் பாதிடப்பட்ட செலவினத்துடன் ஒப்பிடுகையில் அதிகாரசபையின் மீண்டுவரும் செலவினங்களில் விலகல் 12 சதவீதத்திலிருந்து 56 சதவீதம் வரையான விலகல்களும் மூலதனச் செலவினங்களில் விலகல் 66 சதவீதம் முதல் 92 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டன.

## 5.3 கொள்வனவுத் திட்டம்

அதிகாரசபையால் தயாரிக்கப்பட்டிருந்த வருடாந்த கொள்வனவுத் திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மூலதனச் செலவினம் ரூபா 32.55 மில்லியனாக இருந்த போதிலும், ஆண்டின் போது ரூபா 11 மில்லியன் தொகை மாத்திரம் செலவிடப்பட்டிருந்ததுடன், நிறுவன வளவில் மேற்கொள்வதற்கு திட்டமிடப்பட்டிருந்த நிர்மாணம் மற்றும் பொருத்துதல் நடவடிக்கைகள் திட்டமிடப்பட்டதன் பிரகாரம் மேற்கொள்ளப்படாமையால் இந்நிலைமை உருவாகியிருந்தது.

## 5.4 தீர்வு காணப்படாதுள்ள கணக்காய்வுப் பந்திகள்

2012 நவம்பர் 15 ஆந் திகதி இடம்பெற்ற பொது முயற்சிகள் குழுக் கூட்டத்தில் வழங்கப்பட்டிருந்த பணிப்புரைகளை அமுல்படுத்தல் நிலைமை கீழே காண்பிக்கப்படுகின்றன.

| கட்டளை | காரணம் | பொழிப்பாக்கப்பட்ட கட்டளை | தற்போதய நிலைமை / அவதானிப்பு |
|---|---|---|---|
| 15 | இராணுவ வீரர்களுக்கிடையே காணி பகிர்ந்தளித்தல் | இதுவரை பகிர்ந்தளிக்கப் படாதுள்ள காணிகளை இராணுவ வீரர்களுக்கு இடையே பகிரப்பட்ட முறை தொடர்பாக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அந்நடவடிக்கைகளை | காணி பகிர்ந்தளித்தல் நடவடிக்கைகளை துரிதப்படுத்துவதற்காக செயல் நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | **துரிதப்படுத்தல்.** | |
| 17 | **2009 முதல் இதுவரை நலனாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ள** காணி, வீடுகள் மற்றும் வீடு நிர்மாணம் அல்லது திருத்தங்களுக்காக வழங்கப்பட்டுள்ள நிதி உதவிகள் | **2009 ஆம் ஆண்டிலிருந்து இதுவரை நலனாளிகளுக்கு அமைச்சு மற்றும் அதிகார சபையால் வழங்கப்பட்டுள்ள** காணி, வீடுகள் மற்றும் வீடு நிர்மாணம் அல்லது திருத்தங்களுக்காக வழங்கப் பட்டுள்ள நிதி உதவிகள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்ட அறிக்கை யொன்று வெவ்வேறாக குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. (மாதத்திற்குள்) | **இதுவரையில் அவ்வாறான அறிக்கையொன்று குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.** |
| 18 | ரணவிரு வீரர்களின் **உரிய தேவைப்பாடு இனங்காணல்** | ரணவிரு வீரர்களின் உரிய **தேவைப்பாட்டை இனங்கண்டு** அது தொடர்பான அறிக்கையொன்றை 3 மாதங்களிற்குள் குழுவிற்குச் சமர்ப்பித்தல் | இதுவரையில் அவ்வாறான அறிக்கையொன்று அதிகார சபையால் குழுவிற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

## 6. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

**கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் தொடர்பாக அவ்வப்போது அதிகாரசபையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டன. பின்வரும் கட்டுப்பாட்டு அம்சங்கள் தொடர்பாக விசேட கவனம்** கோரப்படுகின்றது.

(அ) கணக்கீடு

(ஆ) பதவியணியினர் முகாமைத்துவம்

(இ) சொத்து முகாமைத்துவம்

(ஈ) உள்ளகக் கட்டுப்பாடு

(உ) கொள்வனவு

ஒப்பம்: டபிள்யூ.பீ.சீ.விக்ரமரத்ன
கணக்காய்வாளர் தலைமை அதிபதி (பதில்)

CHECKED
RE Division

# ரணவிரு சேவா அதிகார சபை
## 2013-12-31 ஆந் திகதியளவில் ஐந்தொகை

| | குறிப்பு | 2013 | | 2012 | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **சொத்துக்கள்** | | | | | |
| **அசையும் சொத்துக்கள்** | | | | | |
| நிதி, அதற்குச் சமமானவை | 1 | | 173,216,534.94 | | 95,857,385.06 |
| எரிபொருள் வைப்பு | 2 | | 90,000.00 | | 90,000.00 |
| பெறவேண்டிய கடன், வட்டி | 3 | 237,150,256.86 | | 349,565,794.56 | |
| கழிக்குக | | | | | |
| சந்தேகத்திற்கிடமான கடன் ஒதுக். | | 2,135,852.38 | | 2,093,367.08 | |
| | | | 235,014,404.48 | | 347,472,427.48 |
| காகிதாதிகள் தொகை | 4 | | 543,324.97 | | 412,874.11 |
| மொத்தம் 01 | | | 408,864,264.39 | | 443,832,686.65 |
| **அசையா சொத்துக்கள்** | | | | | |
| நிலையான வைப்புக்கள் | 5 | | 28,000,000.00 | | 28,000,000.00 |
| உட்கட்ட., பொறி மற். உபகரணம் | 6 | | 24,158,802.89 | | 13,165,795.00 |
| காணியும் கட்டிடங்களும் | 7 | | 209,663,253.96 | | 137,305,452.82 |
| மொத்தம் **02** | | | 261,822,056.85 | | 178,471,247.82 |
| **மொத்த சொத்துக்கள் ^03=01¬02&** | | | **670,686,321.24** | | **622,303,934.47** |
| பொறுப்புக்கள் | | | | | |
| **நடைமுறைப் பொறுப்புக்கள்** | 8 | | 5,573,236.87 | | 9,936,286.13 |
| மொத்தம் 04 | | | 5,573,236.87 | | 9,936,286.13 |
| **அசையாப் பொறுப்புக்கள்** | 9 | | 7,480,252.94 | | 17,543,363.55 |
| மொத்தம் 05 | | | 7,480,252.94 | | 17,543,363.55 |
| **மொத்தப் பொறுப்புக்கள் (06=04+05)** | | | 13,053,489.81 | | 27,479,649.68 |
| **தேறிய பொறுப்புக்கள் (03-06)** | | | **657,632,831.43** | | **594,824,284.79** |
| **தேறிய சொத்துக்கள் /கையிருப்பு** | | | | | |
| ஊழியர் கடன் சுழற்சிக் கடன் | | | 9,097,122.63 | | 8,909,739.16 |
| மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | | | 81,835,290.21 | | 6,033,333.33 |
| திரண்ட மிகை/ (பற்றாக்குறை) | | | 566,700,418.59 | | 579,881,212.30 |
| **மொத்த தேறிய சொத்துக்கள் /கையிருப்பு (01¬02-04)** | | | **657,632,831.43** | | **594,824,284.79** |

மேற்படி ஐந்தொகை இலக்கம் 02 இருந்து 27 வரையிலான பக்கங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கணக்கீட்டுக் கொள்கை மற்றும் குறிப்புக்கள்ன் சீராக்கங்களுடன் சேர்த்து வாசிக்கப்படல் வேண்டும்.

இந் நிதிக் கூற்றுக்களை தயாரித்து, சமர்ப்பிக்கும் பொறுப்பு முகாமைத்துவ சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. முகாமைத்துவ சபையின் பொருட்டு இந் நிதிக் கூற்றினை கையொப்பமிட்டு, வெளியிடும் அதிகாரம் 2014.12.31 ஆந் திகதி வழங்கப்பட்டது.

பீ.எம்.ஜே.கே. பண்டார
பதில் கணக்காளர்
ரணவிரு சேவா அதிகாரசபை

பத்மா வெத்தேவ
தலைவர்
ரணவிரு சேவா அதிகாரசபை

# ரணவிரு சேவா அதிகார சபை

## 2013-12-31 ஆந் திகதியளவில் இறுதி ஆண்டிற்கான நிதிச் செயலாற்றக்கூற்று

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் |
| **வருமானம்** | | | |
| அரசிறை (மீண்டுவரும்) | **10** | 69,446,653.00 | 35,590,493.37 |
| சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானம் | | 87,353,560.00 | 103,822,260.00 |
| வட்டி | **11** | 8,524,893.61 | 10,000,926.84 |
| ஊழியர் கடன் வட்டி | | 187,383.47 | 190,868.69 |
| சேவைக் கட்டணம் | **12** | 11,109,028.79 | 10,085,710.73 |
| ரணவிரு கொடி விற்பனை வருமானம் | **13** | 6,117,874.00 | 5,410,673.73 |
| நன்கொடை | **14** | 2,725,141.44 | 4,537,547.90 |
| மிகை ஒதுக்கம் | **15** | 3,400,000.00 | 245,076.56 |
| மீள்மதிப்பீட்டு இலாபம் | **16** | 556,377.81 | - |
| பிற வருமானம் | **17** | 1,367,445.25 | 1,270,555.91 |
| **மொத்த வருமானம் (01)** | | 190,788,357.37 | 171,154,113.73 |
| **செலவினம்** | | | |
| ஆட்களுக்கான வேதனாதிகள் | **18** | 23,073,399.43 | 22,761,801.23 |
| பிரயாணச் செலவுகள் | **19** | 633,143.85 | 603,969.15 |
| வழங்கல்கள் | **20** | 3,367,450.43 | 3,830,938.84 |
| பேணல் செலவினம் | **21** | 4,034,574.65 | 2,719,599.21 |
| ஒப்பந்தச் சேவைகள் | **22** | 4,971,769.51 | 6,121,946.62 |
| பிற மீண்டுவரும் செலவினம் | **23** | 2,147,636.01 | 871,417.10 |
| செயற்திட்ட செயற்பாட்டுச் செலவினம் | **24** | 160,708,061.50 | 124,715,296.93 |
| தேய்மானம் | | 4,110,331.06 | 2,679,433.49 |
| மீளமதிப்பீட்டு நட்டம் | **25** | - | 4,542,009.54 |
| பற்றாக்குறை ஒதுக்கம் | **26** | 42,485.30 | 592.00 |
| நிதிசார் செலவினம் | **27** | 1,061.48 | 12,424.91 |
| **மொத்தச் செலவினம் (02)** | | 203,089,913.22 | 168,859,429.02 |
| **காலப்பகுதியின் மொத்த மிகை / (பற்றாக்குறை) (01-02)** | | (12,301,555.85) | 2,294,684.71 |

## ரணவிரு சேவா அதிகார சபை

## 2013-12-31 ஆந் திகதியளவில் இறுதி ஆண்டிற்கான நிதிப் பாய்ச்சல் கூற்று

| | குறிப்பு | 2013 | 2012 |
|---|---|---|---|
| **செயற்பாட்டு நடவடிக்கைகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | | ரூபா சதம் | ரூபா சதம் |
| மிகை / (பற்றாக்குறை) | | (12,301,555.85) | 2,294,684.71 |
| **சீராக்கம்** | | | |
| தேய்மானம் | | **4,110,331.06** | 2,679,433.49 |
| பணிக்கொடைக்கான ஒதுக்கம் | | 986,889.39 | 1,566,280.00 |
| வட்டி வருமானம் | | (8,524,893.61) | (10,000,926.84) |
| மீள்மதிப்பீட்டு நட்டம் (இலாபம்) | | (556,377.81) | 4,542,009.54 |
| அதிவிசேட உருப்படி | | **(11,741,854.39)** | (10,525,573.18) |
| **செயற்பாட்டு மூலதன மாற்றங்களுக்கு முன்னரான செயற்பாட்டு மிகை / (பற்றாக்குறை)** | | **(28,027,461.21)** | **(9,444,092.28)** |
| காகிதாதிகள் அதிகரிப்பு/ குறைவு | | **(130,450.86)** | (105,515.76) |
| செலுத்த வேண்டிய தொகை அதிகரிப்பு / குறைவு | | **(4,363,049.26)** | (142,897.65) |
| பெறவேண்டிய தொகை (அதிகரிப்பு) / குறைவு | | **112,458,023.00** | (5,773,737.09) |
| வைப்பு (அதிகரிப்ப)/குறைவி | | **-** | (30,000.00) |
| செயற்பாடுகளினால் உருவான நிதிப்பாய்ச்சல் அதிகரிப்பு/(குறைவு) | | **79,937,061.67** | **(15,496,242.78)** |
| செயற்பாடுகளுக்கான தேறிய நிதிப்பாய்ச்சல் | | **79,937,061.67** | **(15,496,242.78)** |
| **முதலீடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | | | |
| காணி மற்றும் கட்டிட விற்பனை / (கொள்வனவு) | | (3,927,228.10) | (18,903,128.99) |
| இயந்திரப் பொறிமுறை விற்பனை / (கொள்வனவு) | | (6,700,213.00) | (578,693.66) |
| தளபாட விற்பனை / (கொள்வனவு) | | (475,364.30) | (17,970.00) |
| வட்டி வருவானம் | | 8,524,893.61 | 10,000,926.84 |
| முதலீடுகளுக்கான தேறிய நிதிப்பாய்ச்சல் | | **(2,577,911.79)** | **(9,498,865.81)** |
| **நிதிச்செயற்பாடுகளுக்கான நிதிப்பாய்ச்சல்** | | | |
| அரசிறை | | | 1,000,000.00 |
| நிதிச் செயற்பாடுகளுக்கான தேறிய நிதிப்பாய்ச்சல் | | **-** | **1,000,000.00** |
| நிதி மற்றும் அதற்குச் சமமானவைகளுக்கான தேறிய அதிகரிப்பு/ குறைவு) | | **77,359,149.88** | **(23,995,108.59)** |
| காலப்பகுதியின் ஆரம்பத்தில் நிதி மற்றும் அதற்குச் சமமான உருப்படிகள் | | **95,857,385.06** | 119,852,493.65 |
| காலப்பகுதியின் இறுதியில் நிதி மற்றும் அதற்குச் சமமான உருப்படிகள் | **01** | **173,216,534.94** | **95,857,385.06** |

# ரணவிரு சேவா அதிகார சபை

## 2013-12-31 ஆந் திகதியளவில் இறுதி ஆண்டிற்கான மொத்தத் தேறிய சொத்துக்கள் / கையிருப்பு வேறுபாடுகள்

| விபரம் | குறிப்பு | ஊழியர் கடன் சுழற்சிநிதியம் | மீள்மதிப்பீட்டு ஒதுக்கம் | திரண்ட மிகை (பற்றாக்குறை) | மொத்த தேறிய சொத்துக்கள் / கையிருப்பு |
|---|---|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் | | ரூபா சதம் |
| **2012-01-01 இல் மீதி (01)** | | 8,718,870.47 | 6,033,333.33 | 582,897,463.86 | **597,649,667.66** |
| சீராக்கம் (02) | **28** | | | (5,120,067.58) | **(5,120,067.58)** |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு மாற்றல் (03) | | 190,868.69 | | (190,868.69) | **0.00** |
| காலப்பகுதிக்கான மொத்த மிகை / பற்றாக்குறை (04) | | | | 2,294,684.71 | **2,294,684.71** |
| காலப்பகுதிக்காக இனங்காணப்பட்ட மொத்த மிகை / (பற்றாக்குறை) (05=02+03+04) | | 190,868.69 | 0.00 | (3,016,251.56) | **(2,825,382.87)** |
| **2012-12-31 இல் மீதி (06=01+05)** | | 8,909,739.16 | 6,033,333.33 | 579,881,212.30 | **594,824,284.79** |
| சீராக்கம் (07) | **28** | | | (691,854.39) | **(691,854.39)** |
| ஊழியர் கடன் சுழற்சி நிதியத்திற்கு மாற்றல் (08) | | 187,383.47 | | (187,383.47) | **0.00** |
| சொத்து மீள்மதிப்பிட்டின் மிகை/ (பற்றாக்குறை) (09) | **29** | | 75,801,956.88 | | **75,801,956.88** |
| காலப்பகுதிக்கான மொத்த மிகை / (பற்றாக்குறை) (10) | | | | (12,301,555.85) | **(12,301,555.85)** |
| காலப்பகுதிக்காக இனங்காணப்பட்ட மொத்த மிகை / (பற்றாக்குறை) (11=07+08+09+10) | | 187,383.47 | 75,801,956.88 | (13,180,793.71) | **62,808,546.64** |
| **2013-12-31 இல் மீதி (12=06+11)** | | 9,097,122.63 | 81,835,290.21 | 566,700,418.59 | **657,632,831.43** |

குறிப்பு 01

**நிதி மற்றும் அதற்குச் சமமானவை**

| | | **2013** | **2012** |
|---|---|---|---|
| | | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| வங்கி மீதி | 30 | 11,476,958.08 | 13,419,186.43 |
| சேமிப்புக் கணக்கு மீதி | 31 | 2,736,931.38 | 2,891,978.86 |
| குறுகியகால முதலீடுகள் | 32 | 159,002,645.48 | 79,546,219.77 |
| | | 173,216,534.94 | 95,857,385.06 |

குறிப்பு 02

**எரிபொருள் வைப்புக்கள்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| பொதுக் கணக்கு | 90,000.00 | 90,000.00 |
| | 90,000.00 | 90,000.00 |

குறிப்பு 03

**பெறவேண்டிய கடன் மற்றும் வட்டி**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| **03-1 பெற வேண்டிய முதலீடுகளுக்கான வட்டி** | | |
| பெறவேண்டிய நிலையான வைப்புக்களுக்கான வட்டி | | |
| கல்விச் செயற்திட்டக் கணக்கு | 132,305.94 | 160,159.83 |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் கணக்கு | 188,095.89 | 196,273.96 |
| **03-2 கடன்** | | |
| பொதுக் கணக்கு | | |
| இடர் கடன் | 4,771,130.00 | 4,142,778.00 |
| சலுகை கடன் கணக்கு | | |
| 1. வீடமைப்புக் கடன் சேவையில் ஈடுபட்டு | 26,841,768.30 | 38,712,190.39 |
| உள்ளோருக்கான வீடமைப்புக்கடன் (குழு) | 102,713,233.50 | 90,578,320.41 |
| வீடமைப்புக் கடன் (கிராமம்) | 3,224,709.38 | 2,476,424.54 |
| 2. மருத்துவக் கடன் | 185,135.59 | 156,603.50 |
| 3 சுயதொழில் கடன் | 3,437,395.85 | 1,940,746.70 |
| 4. முச்சக்கரவண்டிக் கடன் | 76,530,987.48 | 74,683,801.60 |
| 5. கல்விக் கடன் | 652,008.36 | 788,620.69 |
| **03-3 சேவைக் கட்டணம்** | | |
| சலுகை கடன் கணக்கு | | |
| 1. வீடமைப்புக் கடன் சேவையில் ஈடுபட்டு | 221,424.97 | 284,759.62 |
| உள்ளோருக்கான வீடமைப்புக்கடன் (குழு) | 340,888.68 | 315,132.16 |
| வீடமைப்புக் கடன் (கிராமம்) | 7,463.05 | 40,790.02 |
| 2. மருத்துவக் கடன் | 2,974.56 | 4,483.30 |
| 3 சுயதொழில் கடன் | 7,099.59 | 6,206.66 |
| 4. முச்சக்கரவண்டிக் கடன் | 138,804.97 | 151,402.42 |
| 5. கல்விக் கடன் | 1,093.75 | 1,333.26 |
| **03-4 சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானம்** | 15,512,959.00 | 133,659,399.00 |
| **03-5 அரசிறை** | | |
| கல்விச் செயற்திட்டக் கணக்கு | | 500,000.00 |
| **03-6 முற்பணம்** | | |
| பொதுக் கணக்கு | 25,000.00 | |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | 215,791.00 | 451,683.50 |
| கல்விச் செயற்திட்டக் கணக்கு | | 147,750.00 |
| திறன்விருத்திச் செயற்திட்டக் கணக்கு | 10,965.00 | |

| | | |
|---|---|---|
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | 910,492.00 | |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் கணக்கு | 1,019,030.00 | 112,950.00 |
| அங்கவீனமுற்ற ஞாபகார்த்த செயற்திட்டக் கணக்கு | | 2,485.00 |
| சலுகை கடன் கணக்கு | 17,000.00 | 10,000.00 |
| **03-7 பண்டிகை முற்பணம்** | | |
| பொதுக் கணக்கு | 31,500.00 | 30,500.00 |
| சலுகை கடன் கணக்கு | 11,000.00 | 11,000.00 |
| | 237,150,256.86 | 349,565,794.56 |

குறிப்பு 04

காகிதாதிகளின் கையிருப்பு

| | **2013** | **2012** |
|---|---|---|
| | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| சலுகை கடன் கணக்கு | 543,324.97 | 412,874.11 |
| | 543,324.97 | 412,874.11 |

குறிப்பு 05

**நிலையான வைப்புக்கள்**

| | **2013** | **2012** |
|---|---|---|
| | **ரூபா சதம்** | **ரூபா சதம்** |
| கல்விச் செயற்திட்டக் கணக்கு | 25,000,000.00 | 25,000,000.00 |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் கணக்கு | 3,000,000.00 | 3,000,000.00 |
| | 28,000,000.00 | 28,000,000.00 |

குறிப்பு 06

**உட்கட்ட, பொறி. மற்.உபகரணங்.**

| விபரம் | தளபாடம் மற்றும் | இயந்திரப் பொறிமுறை | வாகனங்கள் | மொத்தம் |
|---|---|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **2013-01-01 இல் மீதி** | **1,258,020.00** | **857,775.00** | **20,236,825.00** | **22,352,620.00** |
| பொதுக் கணக்கு | 1,258,020.00 | 857,775.00 | 16,450,000.00 | **18,565,795.00** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | | 3,700,000.00 | **3,700,000.00** |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | | 86,825.00 | **86,825.00** |
| | | | | **-** |
| **கூட்டுக** | **475,364.30** | **6,700,213.00** | **-** | **7,175,577.30** |
| பொதுக் கணக்கு | 475,364.30 | 6,700,213.00 | | **7,175,577.30** |
| | | | | **-** |
| **செயற்திட்டங்களிடையே ஒதுக்கம்** | - | - | - | **-** |
| பொதுக் கணக்கு | | | 3,786,825.00 | **3,786,825.00** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | | (3,700,000.00) | **(3,700,000.00)** |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | | (86,825.00) | **(86,825.00)** |
| | | | | **-** |
| **நீக்குதல் மற்றும் சீராக்கம்** | **282,635.00** | **303,900.00** | **(3,408,825.00)** | **(2,822,290.00)** |
| பொதுக் கணக்கு | 282,635.00 | 303,900.00 | (3,408,825.00) | **(2,822,290.00)** |
| **2013-12-31 இல் மீதி** | **2,016,019.30** | **7,861,888.00** | **16,828,000.00** | **26,705,907.30** |
| **தேய்மானம்** | | | | |
| **2013-01-01 திரண்ட தேய்மான ஒதுக்கம்** | **-** | **-** | **9,186,825.00** | **9,186,825.00** |
| பொதுக் கணக்கு | | | 5,400,000.00 | **5,400,000.00** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | | 3,700,000.00 | **3,700,000.00** |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | | 86,825.00 | **86,825.00** |
| | | | | **-** |
| **வருமதி செல்மதிக் கணக்கு** | **188,703.00** | **128,666.25** | **3,649,342.46** | **3,966,711.71** |
| பொதுக் கணக்கு | 188,703.00 | 128,666.25 | 3,649,342.46 | **3,966,711.71** |
| **செயற்திட்டங்களிடையே மாற்றங்கள்** | - | - | - | **-** |
| பொதுக் கணக்கு | - | - | 3,786,825.00 | **3,786,825.00** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | | (3,700,000.00) | **(3,700,000.00)** |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | | (86,825.00) | **(86,825.00)** |
| | | | | **-** |
| **நீக்குதல் மற்றும் சீராக்கம்** | **-** | **-** | **(10,606,432.30)** | **(10,606,432.30)** |
| பொதுக் கணக்கு | | | (10,606,432.30) | **(10,606,432.30)** |
| **2013-12-31 திரண்ட தேய்மான ஒதுக்கம்** | **188,703.00** | **128,666.25** | **2,229,735.16** | **2,547,104.41** |
| **2013-12-31 தேறிய புத்தகப் பெறுமதி** | **1,827,316.30** | **7,733,221.75** | **14,598,264.84** | **24,158,802.89** |

குறிப்பு 07

## காணி மற்றும் கட்டிடம்

| விபரம் | காணி | கட்டிடம் | மொத்தம் |
|---|---|---|---|
| | ரூபா சதம் | ரூபா சதம் | ரூபா சதம் |
| **2013-01-01 இல் மீதி** | **-** | **138,370,966.51** | **138,370,966.51** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | 101,113,189.42 | 101,113,189.42 |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | 34,385,390.09 | 34,385,390.09 |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் க/கு | | 2,872,387.00 | 2,872,387.00 |
| | | | - |
| | | | - |
| **கூட்டுக** | **-** | **3,927,228.10** | **3,927,228.10** |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | 3,927,228.10 | 3,927,228.10 |
| | | | - |
| **செயற்திட்டங்களிடையே ஒதுக்கம்** | - | - | - |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | | 38,312,618.19 | 38,312,618.19 |
| உள சமுதாய செயற்திட்டக் கணக்கு | | (38,312,618.19) | (38,312,618.19) |
| | | | - |
| **நீக்குதல் மற்றும் சீராக்கம்** | **147,000,000.00** | **(78,425,807.61)** | **68,574,192.39** |
| வீடமைப்பு அபிவிருத்தி செயற்திட்டக் கணக்கு | 147,000,000.00 | (78,425,807.61) | 68,574,192.39 |
| | | | - |
| 2013-12-31 இல் மீதி | **147,000,000.00** | **63,872,387.00** | **210,872,387.00** |
| **தேய்மானம்** | | | |
| **2013-01-01 திரண்ட தேய்மான ஒதுக்கம்** | **-** | **1,065,513.69** | **1,065,513.69** |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் க/கு | | 1,065,513.69 | 1,065,513.69 |
| | | | - |
| **செயற்திட்டங்களிடையே ஒதுக்கம்** | **-** | **143,619.35** | **143,619.35** |
| ரணவிரு ஞாபகார்த்த செயற்திட்டக் க/கு | | 143,619.35 | 143,619.35 |
| | | | - |
| **செயற்திட்டங்களிடையே ஒதுக்கம்** | | | - |
| | | | - |
| **நீக்குதல் மற்றும் சீராக்கம்** | | | - |
| **2013-12-31 திரண்ட தேய்மான ஒதுக்கம்** | **-** | **1,209,133.04** | **1,209,133.04** |
| 2013-12-31 தேறிய புத்தகப் பெறுமதி | **147,000,000.00** | **62,663,253.96** | **209,663,253.96** |

குறிப்பு 08
நிலையான பொறுப்புக்கள்

| | | 2013 | 2012 |
|---|---|---|---|
| | | ரூபா சதம் | ரூபா சதம் |
| **08-1** | **ஆளுக்குரிய சேதனாதிகள்** | | |
| | செலுத்த வேண்டிய ஊழியர் சேமலாப நிதி | | |
| | பொதுக் கணக்கு | 232,712.93 | 232,261.61 |
| | செலுத்த வேண்டிய ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம் | | |
